விலை சதம் 5

கொழும்பு பதிப்பு

பக்கங்கள் 4

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்

சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு சர்வஜித்து ஆம் புரட்டாசி மீ 25உ சனிக்கிழமை — Colombo, October, 11 — ஹிஜிரி 1366 துல்கஃதா பிறை 25 | இதழ் 130

பாலஸ்தீன எல்லையில் எகிப்து, சிரியா படைகள்

அராபிய லீக்கின் ராணுவ நடவடிக்கை

பெய்ரூத் நகரில் ஐந்து அராபிய நாடுகளின் பிரதம மந்திரிகள் மகாநாடு

கிரான்ட் முப்தி ஈடுபட எகிப்து அனுமதித்தது சரியா என்று யோசிக்கிறது பிரிட்டன்

யூதர் குடியரசை ஸ்தாபிக்க முயற்சிக்கும் 1,40,000 அங்கத்தினரையுடைய அமெரிக்கா லீக்

பெய்ரூத், அக். 10

நேற்று பெய்ரூத் நகருக்கு அருகேயுள்ள அலே என்ற மலைவாசஸ்தலத்தில் சிரியா, லெபானன், ஈராக், டிரான்ஸ் ஜோர்டான், எகிப்து ஆகிய ஐந்து அராபிய நாடுகளின் பிரதம மந்திரிகள் அந்தரங்கமாக மகாநாடு கூடி, பிரிட்டிஷ் பாலஸ்தீனத்திலிருந்து வெளியேறினால் உடனே அராபிய நாடுகள் ராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டுமென தீர்மானித்தனர். இத்தீர்மானம் நேற்றிரவு நடைபெற்ற அராபிய லீக்கின் பதினாங்காவது மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது. பாலஸ்தீனத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, யூதர்கள் ஆக்கிரமிப்பைத் தடுக்க ராணுவ நடவடிக்கை எடுக்க அராபிய படைகளை ஐந்து அராபிய நாடுகளும் திரட்டி யுத்தத்திற்கு ஆயத்தம் செய்ய வேண்டுமென்று மகாநாடு தீர்மானித்தது. பாலஸ்தீன பாதுகாப்புக்கு வேண்டிய பொருளாதார நடவடிக்கைகளும் ஒழுங்கு நடவடிக்கைகளும் எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிடையே பாலஸ்தீனத்தின் எல்லைப்புறங்களுக்கு எகிப்து துருப்புகளும், சிரியா துருப்புகளும் படையெடுக்க முன்னேறிச் சென்றுவிட்டதாக அராபிய லீக் காரியதரிசி அசாம் பாஷா நேற்றிரவு தெரிவித்தார். அராபியர் சார்பாக போராட மாஜி பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளும் மாஜி பிரிட்டிஷ் விமானப் படை அதிகாரிகளும் தனக்கு வாக்களித்திருப்பதாக அசாம் பாஷா தெரிவித்தார்.

கிரான்ட் முப்தியும் பிரிட்டனும்

லண்டன், அக். 9

பிரிட்டிஷ் அந்நியநாட்டுக் காரியாலயப் பிரதிநிதி பின்வருமாறு தெரிவித்தார்:-

லெபானன் நாட்டின் தலைநகரான பெய்ரூத்துக்கு ஜெருஸலேம் கிரான்ட் முப்தி எகிப்திய மன்னருடன் வந்து சேர்ந்தது சம்பந்தமாக அங்குள்ள பிரிட்டிஷ் பிரதிநிதி திரு. டி. ஈ. எவான்ஸ் லெபானன் சர்க்கார் அந்நியநாட்டுக் காரியாலயத்தாரிடம் புகார் கூறியிருக்கிறார். லெபானனில் கிரான்ட் முப்தியை வரவேற்றதைக் குறித்து பிரிட்டனில் விரோதமான அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறதென்று அவர் அறிவித்திருக்கிறார்.

ஜெருஸலேம் கிரான்ட் முப்தி பிரிட்டிஷ் சர்க்காரால் பாலஸ்தீனத்திலிருந்து நாடுகடத்தப்பட்டவர். சென்ற வருடம் அவர் பிரான்ஸிலிருந்து தப்பி ஓடி எகிப்தில் அடைக்கலம் புகுந்து அலெக்சாண்டிரியா நகரில் வசித்து வருகிறார். எகிப்தில் அவர் அரசியலில் கலந்து கொள்ளாமலிருக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்கார் எகிப்திய சர்க்காரிடமிருந்து வாக்குறுதி வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அதற்கு மாறாக கிரான்ட் முப்தி அராபிய லீக்கின் அரசியலில் ஈடுபட்டுவருகிறார். அதிலும் பாலஸ்தீன சம்பந்தமான அராபிய லீக் நடவடிக்கைகளில் மும்முரமான பங்கு பற்றி வருகிறார். பெய்ரூத்தில் நடைபெறும் அராபிய நாடுகளின் மிக முக்கியமான கூட்டத்தில் கலந்துகொள்ள அவர் வந்திருப்பது, பாலஸ்தீனத்திலிருந்து பிரிட்டன் வெளியேறினால் அராபிய லீக் எடுத்துக்கொள்ள விருக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கேயாகும். இவ்விஷயம் லண்டன் வட்டாரங்களில் மிக்க சிரத்தையுடன் கவனிக்கப்பட்டுவருகிறது.

கிரான்ட் முப்தி லெபானன் செல்ல எகிப்து சர்க்கார் அனுமதியளித்தது நியாயமாகுமா என்பதுபற்றி பிரிட்டிஷ் சர்க்கார் ஆலோசித்து வருகிறார்கள்.

கிரான்ட்முப்தி இப்பொழுது டமஸ்கஸ் நகரிலிருப்பதாகவும் அங்கு அவர் சிரியா குடியரசுத் தலைவரைச் சந்ித்துப் பேசுவதாகவும் சிரியா பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

பாலஸ்தீனத்தில் யூதர்களை சட்ட விரோதமாகக் கொண்டு வந்து குடியேற்ற சிரியாவின் துறைமுகப் பட்டினங்களிலுள்ள பல தெருக்களில் யூதர்களின் ஏஜெண்டுகளின் ஸ்தாபனங்களிருப்பதாகவும் அது சம்பந்தமாக சட்ட விசாரணை செய்யவேண்டுமென்றும் சிரிய பத்திரிகைகள் எழுதுகின்றன.

சட்ட விரோதமான யூதர் கப்பல்கள்

16,000 யூதர்களை பாலஸ்தீனத்தில் சட்ட விரோதமாகக் குடியேற்ற கருங்கடலில் இரண்டு பெரிய கப்பல்கள் வந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

பிரிவினைக்கு ஆதரவு

ஐக்கிய தேச பாலஸ்தீன கமிட்டியில் சுவீடன் பிரதிநிதி பாலஸ்தீன பிரிவினையை ஆதரித்துப் பேசினார்.

குர்திகள் புரட்சி

துருக்கிக்கும் சிரியாவுக்கும் மத்தியிலுள்ள எல்லைப்புறத்தில் ஜெரிஷ் பிரதேசத்திலுள்ள குர்தி ஜாதியார் புரட்சி செய்தனர். இவ்விடத்திற் கருகே தான் துருக்கியையும் ஈராக்கை

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தியா - இலங்கை படகுபோக்குவரத்து

கோடிக்கரை துறைமுக அபிவிருத்தி

இந்திய சர்க்காரிடம் சென்னை சர்க்கார் வற்புறுத்தல்

சென்னை, அக். 9

தென் இந்தியாவுக்கும்-இலங்கைக்குமிடையே படகு போக்குவரத்துக்கான வசதி செய்யும் பொருட்டு கோடிக்கரை துறைமுகத்தை ஒரு பெரிய துறைமுகமாக அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்ததல்லவா? திட்டத்தை அதரித்து சென்னை சர்க்கார் மீண்டும் தங்கள் கட்சியை எடுத்துச் சொல்லியிருக்கிறார்களென்றும் தற்போது இதை அபிவிருத்தி செய்ய வேண்டாமென்று இந்திய சர்க்கார் செய்த தீர்மானத்தை மீண்டும் புனராலோசனை செய்யுமபடி சென்னை சர்க்கார் இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் தெரிகிறது.

ரயில் போக்குவரவுக்கும் படகுபோக்குவரவுக்கும் தகாத போட்டி ஏற்படுமென்பதாலேயே மத்திய சர்க்கார் இத்திட்டத்தை ஆக்ஷேபித்தார்களென்பது ஞாபகமிருக்கலாம். இந்தசந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு போதுமான தனி ஏஜன்ஸிகள் முன்வந்து இரு நாடுகளுக்கிடையே படகு போக்குவரத்தை நடத்துமா என்று மத்திய சர்க்காருக்கு நிச்சயமில்லை.

இது சம்பந்தமாக இந்திய சர்க்கார் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவித்ததும் சென்னை சர்க்கார் இது பற்றி விசாரித்தனர். போதுமான அளவு தனி ஏஜன்ஸிகள் கோடிக்கரை துறைமுகத்திலிருந்து கப்பல் படகு போக்குவரத்தை நடத்துமென்று சர்க்காருக்கு திருப்தி ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

சென்னை சர்க்காரின் மராமத்து மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் இவ்விஷயத்தின் முக்யத்வததை வற்புறுத்தி தங்கள் தீர்மானத்தை புனராலோசனை செய்யும்படி இந்திய சர்க்காருக்கு மீண்டும் எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

மஞ்சு இளவரசர் புத்திரி மீது சதி வழக்கு

நீதிஸ்தலத்தில் ஜனங்கள் படையெடுப்பு

ஷாங்கை, அக். 9

ஜப்பான் யுததத்திற்கு முன்னிருந்த கருநாகச் சங்கத்தின் தலைவரும் மஞ்சு இளவரசருமான கவாஷிமாவின் வளர்ப்புப் புதல்வி யாஷிடோ மீது தொடரப்பட்டிருந்த சதிவழக்கு விசாரணை இன்று பீப்பிங் நகரிலுள்ள நீதிஸ்தலத்தில் ஆரம்பமாயிற்று. இந் நிகழ்ச்சியைக் காண 3000 ஜனங்கள் வந்தால் ஏற்பட்ட நெருக்கடியில் கட்டிட ஜன்னல்கள் தகர்க்கப்பட்டன. அதன் காரணமாக விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (ராய்ட்டர்)

சிங்கக் கொடியை தேசியக்கொடியாக்க

திரு. சேனநாயக்கா கையாளும் தந்திரம்

[அரசியல் நிருபர்]

கொழும்பு, அக். 11

கையில் வாளேந்திய சிங்கக் கொடி, சிங்கள ஜாதியினருக்கே உரிய கொடியென்றும், அது தேசியக் கொடியல்லவென்றும் பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயக்கா கூறியுள்ளாராம்.

ஆனால் சிங்கக் கொடிகள் இலங்கையில் முக்கியமான விழாக்களின்போது "யூனியன் ஜாக்" கொடியுடன் அரசாங்கக் கட்டிடங்களில் பறக்க விடுவதில் ஒருவித குற்றமும் இல்லையென்றும் கூறியுள்ளாராம்.

இச் சிங்களக் கொடிகள், பாராளுமன்றத் திறப்பு விழாவின்போது பறக்கவிடுவது சம்பந்தமாக என்னுடன் பேசிய ஒரு உயர்தர உத்தியோகஸ்தர், திரு. சேனநாயக்கா இப்பொழுது சொல்லுவார், அது தேசியக் கொடியல்ல; அது பறக்க விடுவதால் கெடுதியில்லையென்றும், ஆனால் தமிழ் மக்கள் தங்கள் கிளாச்சியைக் கைவிட்டதும், சிங்கக் கொடிதான் தேசியக்கொடி என்று கூசாது கூறுவார். மாஜி ஒடிட்டர் ஜெனரல் திரு. கனகரத்தினத்திற்குச் செய்தது தான் இக்கொடி விஷயத்திலும் நடக்கும்" என்று சொன்னார்.

மேலும் அவர்கூறியதாவது:- "கடைசிவரைக்கும் தேசியக் கொடி அமைப்பதற்குமுன் சிங்களக்கொடியை அரசாங்கக்கட்டிடங்களில் பறககவிட மறறச் சமூகத்துப் பிரதிநிதிகள் ஒத்துக் கொடுக்கக்கூடாது."

மீன் பிடி இலாகா மந்திரி திரு. ஜோர்ஜ் ஈ. டி. சில்வா, தமது காரில் கட்டி ஓடுவதற்காக வாளேந்திய சிங்கக் கொடிகள் இங்கேயே தயாரிக்கும்படி உத்தரவிட்டுள்ளாராம்.

இங்குதயாரிக்கும் கொடிகள் நல்லதாக இருந்தால், தேசியக் கொடிகள் அநேகம் தயாரிக்கப் படுமாம்.

திரு. ஸில்வா சிங்கக் கொடி தான் இலங்கையின் தேசியக் கொடி என்று கூறுகின்றாராம்.

இந்தியா-இலங்கை பிரச்னை

நேருஜிக்கு திரு. சேனநாயகாகடிதம்

புது மந்திரிசபையின் முதல் வேலை

கொழும்பு, அக் 9

இலங்கை புது மந்திரிசபை வேலைசெய்ய ஆரம்பித்த உடனேயே இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே உள்ள எல்லா முக்கியமான பிரச்னைகளும் திருப்திகரமாக பைசல் செய்யப்படுமென்று தெரிகிறது. மற்றெல்லா பிரச்னைகளிலும் இது தான் மிகவும் முக்கியமான பிரச்னையாக இருக்கும்.

கொழும்புவின் பிரதமர் ஸ்ரீ. டி. எஸ். சேனநாயகா இந்த பிரச்னையைத் தீர்க்க மிகவும் சிரத்தையுள்ளவராக இருக்கிறாரென்றும் டிசம்பர் மாதத்தில் இது பற்றிப் பேச பண்டித நேருவுக்கு சௌகரியமாயிருந்தால் தான் டில்லிக்கு வரத் தயாரென்றும் ஸ்ரீ சேனநாயகா கூறியுள்ளதாகத் தெரிகிறது.

அவர் ஒருகடிதம் எழுதியுள்ளாரென்றும் நம்பகமாகத் தெரிகிறது டிசம்பர் மாதத்தில் இது பற்றிப் பேச பண்டித நேருவுக்கு சௌகரியமாயிருந்தால் தான் டில்லிக்கு வரத் தயாரென்றும் ஸ்ரீ சேனநாயகா கூறியுள்ளதாகத் தெரிகிறது.

மேலும் இரண்டு தேர்தல் ஆட்சேபனைகள்

கொழும்பு தென்பகுதியில் திரு சரவணமுத்துவின் மனு

புத்தளையிலும் ஆட்சேபனை

கொழும்பு, அக். 11

கொழும்பு தென்பகுதித் தேர்தலில் வெற்றி அடைந்த திரு. ஆர். ஏ. டி மெல்லின் தெரிவை ஆட்சேபித்து நேற்று சுப்ரீம் கோர்ட்டில் ஒரு தேர்தல் மனு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி மனுவை பிரஸ்தாப தேர்தலில் கலந்து கொண்ட திரு. பி. சரவணமுத்துவே சமர்ப்பித்துள்ளார். ஆட்சேபனைக்கு கீழ்க்கண்ட காரணங்கள் காட்டப்பட்டுள்ளன.

(1) திரு. மெல் அரசாங்கக் கண்ட்ராக்ட் ஒன்றை ஏற்று நடத்தியமை.

(2) ஆள் மாறாட்டம். (3) லஞ்சம். (4) விருந்துபசாரம்.

புத்தளைத் தொகுதி

புத்தளைத தொகுதி பார்லிமெண்டு தெரிவை ஆட்சேபித்தும் ஒரு தேர்தல் மனு சமர்ப்பிக்கப்பட்டது. வெற்றி அடைந்த லியோ பெர்ணாண்டோ அரசாங்க கண்ட்ராக்ட உடையவர் என்றும் பயமுறுத்தல், தப்பான செல்வாக்குப் பிரயோகம் போன்ற குற்றங்கள் இவர்மீது சொல்லப்பட்டுள்ளன. மேற்படி தேர்தல் மனுவைச் சமர்ப்பித்துள்ளவர் பெயர் டி. டொன் அலெக்ஸாண்டர் என்பதாகும்.

யாழ்ப்பாண பிஷப்புக்கு அமோகமான வரவேற்பு

யாழ்ப்பாணம், அக். 10

வியாழக்கிழமை காலையில் யாழ்ப்பாண புகையிரத ஸ்தானததில் தென்னிந்திய ஐக்கிய சேர்ச்சின் முதலாவது யாழ்ப்பாண அத்தியட்சகர் (பிஷப்) அதி சங்கைக்குரிய எஸ் குலேந்திரன் அவர்கள் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம வந்தபொழுது ஒரு விசேஷமான வரவேற்பு அளிககப்பட்டது

சங்கை குலேந்திரன் வரவேற்பில் பேசியபோது, இந்தமாதிரியான வரவேற்பும், மலர் மாலைகள் அணிதலும், கொல்லகொண்டுபோகும் ஒரு மாட்டின் நிலைமையை ஒத்திருந்தது எனக் கூறினார்.

மேலும் அவர் அரசாங்க சபை பகிஷகாரத்தை யாழ்ப்பாண மக்கள் அந்த டொனமூர் திட்ட பகிஷகார காலத்தில் விரும்பவில்லை யென்பது இப்பொழுது தெரிகின்றது எனக் கூறினார்.

நீர்ப்பாசன அதிகாரி கொல்லப்பட்டார்

டம்புலை, அக் 9

டம்புலவைச் சேர்ந்த நீர்ப்பாசன இலாகா உதியோகஸ்தர் திரு. ராசநாயகம் பொல்லால் தாக்கப்பட்டு இறந்து போனார். இது சம்பந்தமாக இருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சிறுபான்மையோர் பாதுகாப்பு

நேர்மையின்றேல் யுத்தமும் நாசமும் விளையும்

மகாத்மாவின் எச்சரிக்கை

மானிட வர்க்கத்தின் இன்றைய தலைவர் மகாத்மாதான் என்கிறார் அமரிக்க அறிஞர்

பம்பாய், அக் 9

ஹோனலுலு, லாஸ்ஏஞ்சல்ஸ்வுட்டுமல் ஸதாபனத்தின் ஆதரவில் ரவீந்திரநாத் தாகூர் ஞாபகார்த்தப் பிரசங்கங்கள் செய்யும் பொருட்டு இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் அமெரிக்கபேராசிரியரானடாக்டர் ஜான் ஹொயின்ஸ ஹோல்ம்ஸ இன்று இங்கு நிகழ்த்திய ஓர் பிரசங்கத்தில் பின்வருமாறு தெரிவித்தார்:-

இன்றைய உலகம் யுத்தங்களினாலும் பலாத்கார செயல்களாலும் நாசமுறும் நிலைமையிலிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் தான் மானிடவர்க்கத்தை சரியான வழியில நடத்திச்செல்லும் தகுந்ததலைவர் ஒருவர் வேண்டும். அதோகதியான நிலைமையிலுள்ள இன்றைய உலகை நேரிய வழியில் நடத்திச் செல்லும் ஆற்றலுள்ள தலைவர்கள் மகாத்மா காந்தியைத் தவிர வேறு எவருமில்லை இன்றைய உலகு அவருடைய தலைமைப் பதவியையே பெரிதும்வேண்டி நிற்கிறது அவருடைய அஹிம்சாதர்மக் கொள்கையும் உலக சகோதரத்வ தத்துவமும் உலக மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறது. உலகத்தில் மக்கள் அனைவரும் இந்த சகோதரதவ மனப்பான்மையை அடையும்வரை ஒவ்வொரு மனிதனும் மகாத்மாவையே தலைவராக ஏற்று அவரது கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும் உலகம்உய்வதற்கு இதைத்தவிர வேறு வழியில்லை.

சிறுபான்மையோர் பாதுகாப்பு

புதுடிலலி, அக். 9

இன்று மகாத்மாகாந்தி பிரார்த்தனைக் கூட்டத்தில் பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்தியாவிலும் பாக்கிஸ்தானிலுமுள்ள சிறுபான்மை வகுப்பினரைப் பாதுகாக்க வேண்டுமென்று இந்திய சர்க்காரும் பாகிஸ்தான சர்க்காரும் ஒருவரையொருவர் கேட்பதற்கு உரிமையுண்டு. இது சம்பந்தமாக இரண்டு சர்ககார்களும் நேர்மையாக நடந்துகொளவதுடன் சிறுபான்மையோர் பாதுகாப்பு விஷயததில் இரு சர்க்கார்களும் ஒத்துழைக்க வேண்டும். எல்லோருடைய விரும்பததக்க இக் காரியததைச் செய்ய முனவராவிடில் இறுதியில் இததகராறு தானாகவே யுத்தத்தில் வந்து முடிநதுவிடும். யுத்தம் என்பதை நான் அடியோடு வெறுப்பவன். ஆனால் ஆயுதங களையும் ராணுவங்களையும் வைத்துக்கொணடிருக்கும் சர்க்கார்கள் யுத்தக்தைத தவிர வேறு மார்க்கததைக் கடைப்பிடிக்க அவர்களால் முடியாது. அவ்விதமான யுத்தம் நேரிடக் கூடிய நிர்ப்பந்தம் ஏற்படின் சர்வ நாசமே விளையும்.

சஹ்ரவர்தி தூது

புதுடிலலி, அக் 9

இன்று பிற்பகல் பண்டித ஜவஹர்லால் நேருவும் ஜனாப் சஹ்ரவர்தியும் மகாத்மா காந்தியைச் சந்தித்து ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். சிறுபான்மை வகுபினர் பாதுகாப்பு சம்பந்தமாக கராச்சிக்கு ஜனாப் சஹ்ரவர்தி தூது சென்று ஜனாப் ஜின்னாவுடன் நடத்திய சமரசப் பேச்சுவார்த்தைகளைப்பற்றியே மகாத்மாவுடன் சம்பாஷணை நடைபெற்றதென்று தெரிய வருகிறது

இந்தியா-சீன உறவு

புதுடில்லி, அக். 9

இன்று சீனக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டு 36 வருடங்களாகின்றன. இந்த 36-வது வருடக் கொண்டாட்ட தினத்தையொட்டி பண்டித நேரு இங்குள்ள சீன ஸதானிகருக்கு கீழ்க்கண்ட செய்தியை அனுப்பினார்:-

பூரண சுதந்திரமுள்ள இந்தியா தேசம உலகில் சமாதானததை நிலைநாடடவும் உலகில் சுபிக்ஷத்தை ஏற்படுத்தவும் சீன தேசத்துடனும் சீன மக்களுடனும் மிகவும் நெருங்கி ஒத்துழைக்க விரும்புகிறது இரு பெரும தேசங்களான இந்தியாவும் சீனமும கொணடாடும் உறவானது உலகிலுளள இதர நாடுகள் ஒன்றிற்கொன்று நடந்துகொள்ள வேண்டுமென்ற போதனையைப் படிப்பிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

பஞ்சாப் அகதிகள்

புதுடில்லி, அக். 9

மேற்குப் பஞ்சாபிலிருந்து முஸ்லிமல்லாத அகதிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். கிழக்குப் பஞ்சாப்பில் அமைதி நிலவுகிறது. பல்லோக் வழியாக இந்தியாவுக்கு வரும் முஸ்லிமல்லாத அகதிகளின் பந்தோபஸ்தநிமித்தமாக அதிக இந்திய துருப்புகள் லயால்பூருக்கும் ஷேக்புராவுக்கும் சென்றன.

20 அகதிகள் இன்னும் வெளியேறுவர்

அமிர்தசரசு, அக் 9.

அகதிகள் பந்தோபஸ்து சம்பந்தமாக ராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பி.எஸ் சிம்ளி பத்திரிகா நிருபர் கூட்டத்தில் பின்வருமாறு தெரிவித்தார்:- அக்டோபர் 4-ம் தேதிவரை ஒருமாத காலத்தில் மேற்கு பஞ்சாப்பிலிருந்து மிகுந்த கஷ்டத

(4 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

194 ஏ, தட்டாந் தெரு, கொழும்பு.
போன்: 8411.

சர்வஜித்து ஞா புரட்டாசி மீ 25உ
சனிக்கிழமை

புண்ணுக்குத் தொட்டி!

காலஞ்சென்ற ஸேர். பி. இராமனாதன், வருடாவருடம் தமது கல்வி நிலையங்களின் புது வருட ஆரம்பத்திற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு ஒரு மகாநாடு கூட்டுவது வழக்கம். அம்மகா நாட்டில் அவருடைய பள்ளிக்கூடங்களில உள்ள உபாத்தியாயர்கள், நிர்வாகிகள் யாவரும் பங்குபற்றுவார்கள். புதுவருடத்தில மாணவர்களுக்குக் கல்வி போதிப்பது, கலாசாலைகள் நிர்வாகம், கல்விச் சீர்திருத்தம் முதலிய விஷயங்கள் மகாநாட்டில ஆராயப்படுவது வழக்கம். இம்மகாநாட்டில் ஒருவருடம் ஒரு உபாத்தியாயர் பங்குபற்றியிருந்தார். அவர்மகாநாடுஆரம்பித்ததும்உபாத்தியாயர்களுக்கு மாச வேதனம்இவ்வருடத்தில்முன்னிலும் பார்க்கக் கூட்டவேண்டும் என்று சொன்னார். உடனே ஸேர். இராமனாதன் கூடம் நடந்த இடத்திற்கு வெளியே கட்டப்பட்டிருந்த ஒரு எருத்து மாட்டைச் சுட்டிக் காட்டினார். "அம் மாட்டின் கண்ணோட்டம் எங்கு செல்லுகின்றது?" என்று கேட்டார். கூட்டத்திலிருந்த ஒரு உபாத்தியாயர், "மாட்டின் பார்வை தூரத்திலுள்ள புண்ணுக்குத் தொட்டியில்தான் திரும்பியிருக்கின்றது; இதை நான் தினமும் கண்டுள்ளேன்" என்று பதில் கூறினார். ஸேர். இராமனாதன் இப்பதிலைக் கேட்டதும் சபையைப் பார்த்து "அம்மாட்டின் பார்வை புண்ணுக்குத் தொட்டியில் செல்லுவது போல, எங்கள் உபாத்தியாயரும் தன் வயிறுகிய புண்ணுக்குத் தொட்டியைத்தான் நோக்கிச் செல்லுகின்றார்; நாமெல்லோரும் விசேஷித்த கல்வியை சிறுவருக்குக் கொடுப்பது எங்ஙனம் என்று ஆலோசிக்கிறோம், ஆனால் ஆசிரியர் தன் வயிறே பெரிதென்கிறார்" என்று சொன்னார். இதன் பிறகு அவ்வாசிரியரை "புண்ணுக்குத் தொட்டி" ஆசிரியர் என்று பலரும்அழைப்பது வழக்கமாகிவிட்டது.

சென்ற புதன்கிழமை நடந்த முதலாவது மந்திரி சபைக் கூட்டத்தில், மந்திரிகள் தங்கள் மாசப்படிகள், பிரதிநிதிகளின் மாசப்படிகள்,காரியதரிசிகளின் மாசப்படிகள் இத்தனை இத்தனை ரூபாயாக இருக்கவேண்டுமென்று ஆலோசித்ததை நினைக்கும்பொழுது இக்கதை எமது ஞாபகத்துக்கு வந்துள்ளது.

மந்திரிகள் எனப்பட்டவர்கள் இன்று ஆலோசிக்க எத்தனை முக்கிய விஷயங்கள் இருக்கின்றன? அவற்றையிட்டு இவர்கள் அக்கறை எடுக்காது தமது வேதனத்தையே கண்ணுங்கருத்துமாக வெளியே காவலிட்டு உள்ளே இரகசியமாகப் பேசினால் இவர்களைப் புண்ணுக்குத் தொட்டி மந்திரிகள் என்றுதான் நாம் கூறவேண்டியிருக்கிறது.

வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருட்களை இலங்கை பெற்றுக் கொள்ளுவதோ சிரமசாத்தியமாயிருக்கின்றது. ஆகவே விவசாயத்தைப் பெருக்குவதற்கு இவர்கள் என்ன செய்ய எண்ணியுள்ளார்கள். வேலையில்லாமல் திண்டாடுபவர்களுக்கு என்னதான் செய்யப் போகின்றார்கள்? சமீபத்தில் நடந்த வெள்ளப் பெருக்கால் எத்தனை மக்கள் மத்திய மாகாணத்தில் இருக்க வீடின்றி அலைகின்றார்கள். கொழும்பில் வெள்ளப் பிரவாகத்தால் பாதிக்கப்பட்டவர்களை மாளிகவத்தைப் பகுதிகளில அரசினர் நிலங்களில், அந்த நேரத்தில் குடியேற்றினார்கள். இப்பொழுது அவர்களைச் சட்டமியற்றிக் கலைப்பதற்கு அரசாங்கம் வழிவகைகள் தேடுவதாக அறிகின்றோம். இவ் அகதிகள் போய் தங்குவதற்கு இடமில்லாதநிலையாற்தான் மாளிகவத்தையில் இருக்கின்றார்கள் என்பதை அரசாங்கம உணரவில்லையா? தேசத்து மந்திரிகள் என இருப்பவர்களுக்கு இதைப் போன்ற வேறுமுக்கிய பிரச்னை வேறு என்ன இருக்கின்றது? இதையிட்டு மந்திரிகள் கவலை கொண்டுள்ளார்களா? இல்லவே இல்லை ஆனால் இதற்குப்பதிலாக தமக்கென ஒரு சொந்தவீடுள்ள பிரதம மந்திரிக்கு லட்சக் கணக்கில் செலவு செய்து 'டெம்பிள் டிரீஸ்' என்னும் வாஸஸ்தானததை அரசாங்கச் செலவில் ஏற்படுத்துகிறார்கள். இன்னும் பிரதிநிதிகள் தங்குவதறகு ஒரு "களப்பும்" சபாநாயகருக்கு ஒரு இலலமும் அரசாங்கச் செலவில் ஏற்படுத்தப் போகின்றார்கள். மந்திரிகளின் கவனம் புண்ணுக்குத் தொட்டியில் அல்லாமல வேறு எங்கேதான் செல்லுகின்றது?

சென்ற அரசாங்க சபையில் 58 பிரதிநிதிகளும் 7 மந்திரிகளும் இருந்தார்கள். இப்பொழுது பாராளுமன்றத்தில் 101 பிரதிநிதிகள், 30 செனட்டர்கள், 14 மந்திரிகள், 14 காரியதரிசிகள், 14நிரந்தரக் காரியதரிசிகள் ஆகியோரும இன்னும்பலரும் இருக்கிறார்கள். இப்படி உத்தியோகஸதர்கள் அதிகமாக ஏற்படுத்தப்பட்ட பொழுது சம்பளவிகிதத்தைக்குறைப்பதன்றி கூடடுவதா முறையும் தர்மமும் என்று கேடகின்றோம்? அரசாங்கசபை மந்திரிகளுக்கும் பிரதிநிதிகளுக்கும் மாசம சம்பளமாக ரூபா 37,000 முன் கொடுக்கப்பட்டுவந்தது. ஆனால் இப்பொழுது இவர்களுக்குப் புதிய திட்டத்தின்படி மாச வேதனத்தில் மாதிரம் ஒன்றேகால் லட்சம் கொடுக்க வேண்டிவரும் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

பிரதிநிதிகள் முன்னிலும் பார்க்க எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும்பொழுது சம்பளத்தைக் குறைக்க வேண்டும். அதுவு மல்லாமல் சென்ற அரசாங்கசபையில் ஒரு அங்கத்தவருக்கு ரூபா 250 வேதனமாகவும் ரூபா 250 அவர் தனது தொகுதியில் பிரயாணம்செய்வதற்காகவும், மற்றும் அவரின் குமாஸதா, உத்தியோக சம்பந்தமான சில்லறைச் செலவுகள் முதலியவற்றிற்காகவும் கொடுக்கப்பட்டது. இப்படியேமந்திரிகளுக்கு ரூபா 1000 வேதனமாகவும, ரூபா 500 அலவன்ஸாகவும் கொடுக்கப்பட்டதாகும். இந்த அலவன்ஸுகள் விருந்துபசாரததிற்காகக கொடுக்கப்பட்டது. ஆனால் மந்திரிகள் அப்படி விருந்துபசாரதுக்குத்தான் செலவழித்தார்களா? என்பதை நாம் முறறுக அறியக்கூடிய நிலைமையிலலை. பிரதிநிதிகளும் அவ்வாறே முழுப் பணத்தையும் தங்கள குடும்பங்களின் செலவுக்கே உபயோகித்ததார்கள் என றுதான் கூறவேண்டியிருக்கிறது.

இந்த நிலைமையில் மீண்டும் கொழுத்தசம்பளம பெறநினைப்பது எவருக்கும் சகஜம். ஆனால் இம்முறைகடசிகோட்பாடுள்ள பிரதநிதிகள் பாராளுமன்ற சபையில் இருக்கின்றார்கள். புண்ணுக்குத் தொட்டியில மாத்திரம கவனஞ் செலுததாது தேசத தொண்டு செயயுமாறு மநதரிகளைத் திருப்பவேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமையாகும்.

குதிரைப் பந்தயமும் சூதாட்டமும்

கலந்துகொள்ளும் அரசாங்க ஊழியர்களுக்கு தண்டனை

கல்கத்தா, அக். 8

அரசாங்க உததியோகஸ்தர்கள் லஞ்ச ஒழிப்பு சம்பந்தமாக மேறகு வங்காள சர்க்கார் கீழ்க்கண்ட உததரவிட்டிருக்கிறார்கள்:- சில அதிகாரிகள் தங்களுக்குத் திடீரென அதிகச் சொதது கிடைத்ததற்கு காரணம் காட்டும்போது பங்குவர்த்தனை மார்க்கெட் சூதாட்ட மூலமாகவும் குதிரைப பந்தய சூதாட்ட மூலமாகவும் பணம் கடைத்ததென்று கூறுகிறார்கள். ஆதலால் அரசாங்க ஊழியர்கள் இவ்விதமான சூதாட்டங்களில் ஈடுபடலாகாது. அப்படி ஈடுபடுகிறவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கபடும்.

காந்தி, நேரு, ஒப்பற்ற தலைவர்கள்

அவர்களை ஹிந்து, முஸ்லிம், சீக்கியர் பின்பற்றவேண்டும்

பாக்கிஸ்தானில் மாஜி வங்க மந்திரி ஜனாப் சஹ்ரவர்தி கர்ஜனை

பாக்கிஸ்தான் பிரதமருக்கு இந்திய முஸ்லிம் லீகர் தந்தி

கராச்சி, அக். 7

சமாதான முயற்சி செய்யும் பொருட்டு கராச்சிக்கு வந்திருக்கும் ஸ்ரீ சஹ்ரவர்தி ஒரு பேட்டியில சொன்னதாவது:-

போதிய மனக்கசப்பு ஏற்பட்டுவிட்டது. கூச்சலையும், உருட்டல் மிரட்டலகளையும் நிறுத்திவிட்டு, நாம் ஒருவருக்கொருவர் வேண்டுமென்றே சண்டையிட்டுக் கொண்டதால ஏற்பட்ட காயங்களை ஆற்றவும் கண்ணீரைத் துடைக்கவும் முயற்சி செய்வோம்.

ஹிந்து இந்தியா என்ற தத்துவத்தை எதிர்ப்பதில் தங்கள் அந்தஸ்து, பதவிகளையே தங்கள் வாழ்வையே பணயம் வைத்துள்ள மகாத்மா காந்தி பண்டித நேரு போன்ற தலைவர்களை நல்லெண்ணமும் மனச்சாட்சியும் உடைய எல்லா மனிதர்களும்-ஹிந்துக்கள் முஸ்லிம்கள் சீக்கியர் யாவரும் ஆதரித்து நிற்க வேண்டும். இந்தத் தலைவர்கள் அமைதி ஐக்கியம் ஏற்பட தங்களால் முடிந்ததையெல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஜன மாற்ற கருத்தை தாம் ஆதரிக்கவில்லை என்று அவர் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

பண்டித நேருவின் தலைமையை அவர் ரொம்பப் பாராட்டினார். நேருவின் தலைமை மிகச் சிறந்தது. அது பிரம்மாண்டமாக வளர்ந்துவிட்டது. யாவரும் அவரை ஆதரிக்க வேண்டும் என்று கூறினார்.

கராச்சி சம்பந்தமாக அவர் சொன்னதாவது:-

"நாம் தாழ்மையான நிலையில் இருக்கிறோம் என்ற உணர்ச்சி மைனாரிட்டிகளுக்கு ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்வது ரொம்ப முக்கியமாகும். அவர்கள் தங்கள் சுயமரியாதையைப் பாதுகாத்துக்கொள்ள வசதிகள் அளிக்க வேண்டும். ஒழுங்காக அமைந்த ஒரு சமூகததில் மனிதனுக்கு மனிதன் எவ்வளவு மரியாதை காட்ட வேண்டுமோ அது மைனாரிட்டிகளுக்குக் காட்டப்பட வேண்டும். இதற்கான வழிகளை சமாதானக் கமிட்டி கண்டுபிடிக்க வேண்டும்.

இன்று மாலை டில்லிக்குச் செல்லும் வழியில் ஸ்ரீ சஹரவர்தி தொழிலாளர் தலைவர்களின் கூட்டமொன்றில் பேசினார்.

எந்த சந்தர்ப்பங்களிலும் தொழிலாளர்கள் திருப்பிபடிக்கும வேலையில் இறங்கக் கூடாது என்பதை தலைவர்கள் தொழிலாளர்களுக்கு விளக்க வேண்டும் என்றும் இரு டொமினியன்களிலும் நடந்த கலவரங்களை ஜனங்கள் மறந்து அமைதியை நிலைநிறுத்துவதில் அதிகாரிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்றும் கூறினார்.

லீகர் தந்தி

புதுவான், அக். 6

மேற்கு பஞ்சாப்பில், முஸ்லிமல்லாதவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளும் அடடூழியங்களும் உடனே நிறுத்தப்படாவிட்டால் இந்திய யூனியனில் வாழும் முஸ்லிம்களின் தலைவிதி எப்படி யிருக்குமென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது என்று எச்சரித்து பாக்கிஸ்தான் பிரதமருக்கு புதுவான் ஜில்லா லீக் தலைவர் ஸ்ரீ அள்ரார் அஹமத் அனுப்பியுள்ள தந்தியில் கூறுகிறார் முஸ்லிமல்லாதவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை இந்தயாவிலுள்ள முஸ்லிமகள் யாவரும் கடுமையாகக் கண்டிக்கிறார்கள். இந்தியாவிலுள்ள முஸ்லிம்களிடம் பாக்கிஸ்தான் அதிகாரிகளுக்கு கொஞ்சமாவது மதிப்பு இருக்குமானால் பாக்கிஸதானில் முஸலிமல்லாதவர்கள் மீது நடக்கும் ஆக்கிரமிப்புகளை உடனடியாக நிறுததவேண்டும் என்றும் ஸ்ரீ அஹ்மத் அத்தந்தியில் கூறியிருக்கிறார்.

ஜனாப் ஜின்னாவை எதிர்த்துப் பேசியவர் கைது

கராச்சி, அக். 7

"அல்ஜமியத்" என்ற பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ சையத் சர்வர்ஷ காந்தி, ஜனாப் ஜின்னாவைக் கண்டித்து ஆக்ஷேபகரமான பிரசங்கங்கள் செய்ததாகக் கைது செய்யப்பட்டார்.

எல்லை ஜமியத் தலைவர் கைது

பெஷாவர், அக். 7

எல்லைப்புற மாகாண ஜமியத் உல் உலமா தலைவர் மௌலானா சையத் குல்பாத்ஷா கைது செய்யப்பட்டிருக்கிறார் மற்றொரு ஜமியத் ஊழியரும் கைது செய்யப்பட்டார்.

19,500 ரூபாய் மோசடி

தொடர்ந்த வழக்கு ரத்து செய்யப்பட்டது

சென்னை, அக். 8

பிரேம் லோகுமல் மன்சுகானி என்பவர் மீதிருந்த வழக்கைப் போலிஸார் வாபஸ் செய்துகொண்டதால் 5-வது மாகாண மாஜிஸ்டிரேட் ஸ்ரீ கே. ராஜகோபாலன் அவரை விடுதலை செய்தார். எனினும் மன்சுகானி பம்பாயில் ஆஜர் செய்யப்படுவதற்காக உடனே கைது செய்யப்பட்டார்.

பம்பாய் ஹார்ன் பிரோடியுள்ள ஏஷியா இம்போர்ட்ஸ் அன்டு இந்திரா பிரேம்சந்த் கம்பெனி மானேஜிங் டைரக்டரான பிரேம் லோகுமல் சென்னை மௌண்ட்ரோட் ரால்டா கார்ப்பரேஷனைச் சேர்ந்த ஸ்ரீ ஆர். ராஜகோபாலிடம் தாம் 'பிரிட்டன்" ரெப்ரிஜரேட்டர்ஸ் ஏஜெண்டு என்றும தன்னிடம் 50 ரெப்ரிஜரேட்டர்கள் இருப்பதாகவும் உடனே அவைகளை சப்ளை செய்வதாகவும் பொய் சொல்லி 1946 மே 9-ம் தேதியன்று ரூ 5000 ஏமாற்றி வாங்கியதாகவும், மே 29-ம் தேதியன்று அட்வான்ஸ் போக்குவரத்து செலவுகளுக்காக ரூ 6000 ஏமாற்றி வாங்கியதாக கூறப்பட்டது.

பிரூட்வேயிலுள்ளமெஸர்ஸ் ஹாரிஸன் கம்பெனியைச் சேர்ந்த ஸ்ரீ எதிராஜியிடம் மன்சுகானி பிரிட்டனில் செய்யப்படும் "ஹார்னஸட்" ஸைக்கிள்களின் பிரத்தியேகஏஜெண்டு என்றுகூறி 1946 மே 15-ம் தேதி ரூ. 5000 மும் மே 23-ம் தேதியன்று ரூ. 3500 ம் வாங்கியதாகவும், இப்படியாக இ. பி. கோ 42-வது பிரிவுப்படி குற்றம் செய்ததாகவும் கூறப்பட்டது.

இந்த வழக்கை இன்று போலிஸார் வாபஸ் வாங்கிக் கொண்டதால் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

பம்பாயில் சில வழக்குகள் சம்பந்தமாக அவர் உடனே கைது செய்யப்பட்டார்.

சினிமா படத்திலும் மதுபானம் கூடாது

சென்னை சர்க்கார் உத்தரவு

சென்னை, அக். 9

சென்னை மாகாணத்தில் காண்பிக்கப்படும் சினிமா படங்களில் கள், சாராயம் முதலிய மதுபான வகைகள் குடிக்கும் குடிகார ஸீன்கள் காண்பிக்கப் படலாகாதென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். சினிமாப் படத் தணிக்கை போர்டார் அவ்விதப் படங்களைத் தடைசெய்துவிட வேண்டுமென்றும் அறிவித்திருக்கிறார்கள்.

ஆஸதிரேலியா செல்லும் இந்தியா கிரிக்கெட் கோஷ்டி

லார்டு மவுண்ட் பேட்டன் ஆசி

புதுடில்லி, அக். 9

இந்தியா கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டன் இந்தியா கிரிக்கெட் போர்டுதலைவர் திரு. ஏ. எஸ். டி மெல்லோவுக்குக் கீழ்க்கண்ட ஆசிச் செய்தியை அனுப்பினார்.

இந்திய கிரிக்கெட் கோஷ்டியார் ஆஸ்திரேலியாவில் வெற்றிகரமாக சுற்றுப்பயணம் செய்து போட்டி விளையாட்டுகளை நடத்திவிட்டுத் திரும்பவேண்டுமென்று விரும்புகிறேன். அதன் பயனாக இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கு மிடையே நலலுறவு உண்டாகுமென்று கருதுகிறேன்.

இந்திய கிரிக்கெட் கோஷடியில் சமீபத்தில் தெரிவுசெய்யப்பட்ட திரு. சி. டி. சர்வட்டே அக்டோபர் 18-ம் தேதி சிட்னிக்குப் புறப்படுகிறார். அக்டோபர் 24-ம் தேதி அடிலெயிட் நகரில் ஆரம்பமாகும் விளையாட்டுக்கு அவர் வந்துவிடுவார். ரணவீரசிங்ஜி, ராய்சிங், சி. ஆர். ரங்காச்சாரி ஆகிய மற்றவர்கள் அக்டோபர் 23-ம் தேதி கல்கத்தாவிலிருந்து விமான மார்க்கமாகப் புறப்பட்டுச் செல்வார்கள். [அ-பிரஸ்]

பஞ்சாப் பாங்கை ரூ. 4 லட்சம் மோசடி செய்ய முயற்சி

சென்னையில் ஒரு பஞ்சாபி கைது

சென்னை, அக். 8

கல்கத்தாவில் வசிப்பதாகக் கூறப்படும் சர்தார் மோஹன் சிங என்னும் ஒரு பஞ்சாபி நேற்று சென்னை நகர போலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார். சர்தார் மோஹன் சிங் மோசடி செய்ததாகவும் பஞ்சாபி நேஷனல் பாங்கை ரூ. 4,20,000 சம்பந்தமாக ஏமாற்ற முயன்றதாகவும் கூறப்படுகிறது.

கல்கத்தாவில் உள்ள பஞ்சாப் நேஷனல் பாங்கின் தலைமைக் காரியாலய மானேஜரின் கையெழுத்துப் போல கள்ளக் கையெழுத்துப் போட்டு சர்தார் மோஹன் சிங் சென்னையிலுள்ள பஞ்சாப் நேஷனல் கிளை பாங்குக்கு ரூ. 4,20,000 க்கு ஒரு "டிமாண்ட் டிராப்ட்" அனுப்பினாராம் அத்துடன் தலைமை பாங்கு மானேஜர் எழுதியிருப்பது போல ஒரு கடிததையும் அனுப்பியிருந்தாராம். தாமதமன்னியில் பணததைப் பட்டுவாடாச் செய்யுமாறு அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது கிளை பாங்கு அதிகாரிகளுக்குச் சந்தேகம் ஏற்படவே, அவர்கள் போலிஸாருக்கு அறிவித்தார்கள். பணம் பெற்றுக்கொள்வதற்காக காஷியிடம் சென்றிருந்த சர்தார் மோஹன் சிங்கை போலிஸார் கைது செய்தனர். அவர்கள் சர்தார் மோஹன் சிங்கின் அறையைச் சோதனை போட்டு வெற்று லெட்டர் பேப்பர்களையும் பஞ்சாப் நேஷனல் பாங்கு ஸீல்களைப் போன்ற போலி ஸீல்களையும் கைப்பற்றினர்.

பிரஞ்சு-இந்தியாவின் எதிர்காலம்

புதுடில்லியில் பிரஞ்சு தூதுக்கோஷ்டி

புதுடில்லி, அக். 9

பிரஞ்சு பிரதம மந்திரி ராமடீரின் சொந்தப் பிரதிநிதி வீமனும், பிரஞ்சு-இந்தியா கமிஷனர் பேரானும டில்லியிலுள்ள பிரஞ்சு ஸதானிகரும் நேற்று முன்தினம் இந்திய சர்க்கார் அந்நிய நாட்டிலாக்கா காரியதரிசியைச் சந்தித்துப் பேசினார்கள். அவர்கள் பிரதம மந்திரி பண்டித நேருவையும் நேற்றுசந்தித்தார்கள். பிரஞ்சு-இந்தியாவின் எதிர்கால நிலை பற்றி பேச்சு நடைபெற்றதாகத் தெரிகிறது. இதன் முடிவை ஷுமன், பாரிஸ சென்று பிரஞ்சு சர்க்காருக்குத் தெரியப் படுததுவார்.

புலியை அரிவாளால் தாக்கிக் கொன்றார்

நெல்லை காட்டில் ஒருவரின் துணிகரச் செயல்

சென்னை, அக் 8

சென்ற ஞாயிற்றுக்கிழமை நெல்லை ஜில்லாவைச் சேர்ந்த களக்காடு காட்டில் பெருமாள் சாம்பான் என்பவர் ஒரு புலியை மிகவும் துணிகரமாக எதிர்த்துத் தாக்கிக் கொன்றதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. பெருமாள் சாம்பானும் முத்தையன் என்பவரும் களக்காட்டைச்சேர்ந்த திரவியம் நாடார் என்பவரின் வேலைக்காரர்கள் அவர்கள் தமது எஜமானனுக்குச் சொந்தமான ஒரு மாட்டை தேடிக் காட்டிற்குச் சென்றனர். அந்த மாடு முந்தின நாளே காட்டிற்கு மேயப்போனது. பிறகு திரும்பவில்லை. மேற்கூறிய இரு வேலைக்காரர்களும் காட்டில் ஒரு புலியைப் பார்த்தனர். புலிக்கும் அவர்களுடைய 'வாசனை' தட்டிவிட்டது. அது அவர்களைத் தாக்குவதற்கு எத்தனித்துக்கொண்டிருந்தது. அச்சமயத்தில் பெருமாள் சாம்பான் அருகாமையிலுள்ள ஒரு புதரில் மறைந்திருந்து அரிவாளால் புலியைத் தாக்கிக் கொன்றார். உடனே இவ்விஷயம் கிராமாதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்டது

காஷ்மீர் சமஸ்தான அமைதி

ஷேக் அப்துல்லா பதினாயிரம் தொண்டர்கள் திரட்டுகிறார்

ஸ்ரீநகர், அக். 9

இன்று காஷ்மீர சமஸ்தான தேசீய மகாநாட்டுத் தலைவரான ஷேக் அப்துல்லா இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- காஷ்மீரத்தில் ஹிந்து முஸ்லிம் சமரசத்தையும் அமைதியையும் நிலைநாட்ட பதினாயிரம் தொண்டர்களடங்கிய சமாதானப் படையொன்றைத் திரட்டுகிறேன். காஷ்மீர சமஸ்தான எல்லைகளில் மலைஜாதியாரும் மற்றுமுள்ளோரும ஆக்கிரமிப்பு செயதுவந்து குவிவதாகச் செய்தி கிடைப்பதால், சமஸதானத்திலுள்ள மக்கள் அனைவரையும் ஜாதிமத பேதமின்றிப் பாதுகாக்க இந்தப் படை மிகவும் அவசியமாகும்.

அடுத்த ஜனாதிபதி ஐஸன் ஹோவர்

அமெரிக்கக் குடியரசுக் கட்சியின் முயற்சி

வாஷிங்டன், அக். 8

அடுத்த வருஷம் நவம்பரில் நடக்கவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜெனரல் ஐஸன் ஹோவரைத் தன் கட்சி அபேட்சகராகக் குடியரசுக் கட்சி நிறுத்துமென்று தெரிகிறது 1948 ஜனவரியில் ஐஸன்ஹோவர் கொலம்பியா சர்வகலாசாலைப் பதவியை ஏற்கவிருக்கிறார். தேர்தலில் நிற்க இன்னும் அவர் சம்மதம் கொடுத்ததாகத் தெரியவில்லை.

பர்மா தொழிலாளர் பாசிச எதிர்ப்பு

ரங்கூன், அக். 9

பிராங்கோவின் பாசிசத்தோடு போராடும் ஸ்பானிஷ் தொழிலாளர்களுக்கு பர்மா தொழிலாளர் ஆதரவளிப்பார்கள் என்று அகில பர்மா தொழிற் சங்க காங்கிரஸில் இன்று தீர்மானம் நிறைவேறியது. அதற்காக நிதி திரட்டவும் முடிவு செய்யப்பட்டது.

நவம்பர் 7-ம் தேதியன்று ரஷியாவின் அக்டோபர் புரட்சி தினத்தைக் கொண்டாடவும் தீர்மானித்தனர்.

(ராய்ட்டர்)

ராமநாதபுரம் ஜில்லா கிராமத்தில் அடிதடி

ஒரு பெண் உட்பட 4 பேர் மாண்டனர்

கிராம முன்சீபு உட்பட பலர் கைது

மதுரை, அக். 8

இம்மாதம் 6-ம் தேதியன்று ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள அபிராமமுக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தை ஜனக்கூட்டமொன்று தாக்கியது. இதன் விளைவாக ஒரு பெண் உட்பட 4 பேர் மாண்டனர்; 9 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கமுதியிலுள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

ராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள எல்லா ரிசர்வ் போலிஸும் இந்தவாலத்திற்கு சென்றிருக்கிறது. இந்த பிரதேசத்திலுள்ள கிராமங்களில் ஆயுதம் தாங்கிய போலிஸார் ஜீப்களில் ரோந்து கொடுத்து வருகின்றனர். ஒரு போலிஸ் இன்ஸ்பெக்டரும் 2 சப் இன்ஸ்பெக்டர்களும் இங்கு வந்திருக்கின்றனர். கிராம இன்ஸபெக்டர் ஒருவரையும் வேறு சிலரையும் போலிசார் கைது செய்திருக்கின்றனர். ராமநாதபுரம் ஜில்லா போலிஸ சூப்பரின்டெண்ட் இன்று ஸதலததிற்கு வந்திருக்கிறார்.

பொருளாதார நெருக்கடியின் எதிரொலி

'புகை குடியாதே'

லண்டன், அக் 8

புகையிலைமீது மீண்டும் இரண்டு மடங்கு வரி விதிக்கப் போவதாகவும் அப்படிச் செய்தால் ஜனங்கள் சிகரட், சுருட்டு குடிக்கும் பழக்கத்தைக் கைவிடுவார்கள் என்று நம்புவதாகவும் இன்று பிரிட்டிஷ் பொருளாதார மந்திரி கிரிப்ஸ அறிவித்தார். சிகரட் ரஸிகர்களுக்கு இது பெரும் மனக் குழப்பத்தை உண்டுபண்ணியிருக்கிறது.

'மாமிசம் தின்னாதே'

வாஷிங்டன், அக். 6

செவ்வாயன்று இறைச்சியும், வியாழனன்று முட்டையும் சாப்பிடாதிருக்க அமெரிக்கர் விரதமெடுக்க வேண்டுமென்றும் இன்று ஜனாதிபதி ட்ரூமன் கோரினார். ஐரோப்பாவுக்கு உதவுவது சொந்த நலமேயாகுமென்றும் உணவு விலைக் கட்டுப்பாட்டில்கண்டிப்பாக இருக்கப்படுமென்றும் சொன்னார்

2 லட்ச ரூபாய் ஜவுளி பறிமுதல்

கொள்ளை லாப வர்த்தகர் மீது நடவடிக்கை

ஆமதாபாத், அக். 8

கொள்ளை லாபமடிப்பதற்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஜவுளிகளைக் கைப்பற்ற இன்று போலிசார் நகரெங்கும் பரிசோதனை நடத்தினர். 200 இடங்களிலிருந்து சுமார் இரண்டு லட்சம் ரூபாய் பெறுமதியான ஜவுளிகளைக் கைப்பற்றினர்கள். மற்றும் பதுக்கிவைக்கப்பட்டிருந்த உணவுப்பொருடகளையும் சாமான்களையும் கைப்பற்றினர்.

இன்னோர் தேர்தல் மனு

கம்பளைப் பகுதி அபேட்சகர் சமர்ப்பித்தார்

கொழும்பு, அக். 11

கம்பளைப் பகுதிக்குத் தெரிவு செய்யப்பட்ட பார்லிமெண்டு அங்கத்தினர் ஆர். எஸ். எஸ். குணவர்த்தனாவின் தேர்தலை ஆட்சேபித்து இத்தொகுதிக்குப் போட்டியிட்ட அபேட்சகரில் ஒருவரான ஆர். எஸ். பெல் போல ஓர் தேர்தல் மனுவை நேற்று முன்தினம் சுப்ரீம் கோர்ட்டில் சமர்ப்பித்தார்.

தேர்தலின்போது ஒழுங்கற்ற முறைகள் பிரஸ்தாப வெற்றிபெற்ற அபேட்சகர் சார்பில் உபயோகிக்கபபட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளதாக அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகக் குமாஸ்தாக்கள் கமிட்டிக் கூட்டம்

போலிஸ் பந்தோபஸ்து

பத்திரிகையாளர் வெளியேற்றம்

கொழும்பு, அக். 10

கோட்டையில் உள்ள இலங்கை வர்த்தகக் குமாஸ்தாக்கள் சங்கக் கட்டடத்தில் நேற்று மாலை நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்தின் போது போலிசார் வெளியில் காவல் புரிந்தனர். இந்த ஏற்பாட்டிற்குக் காரணம் சங்க உத்தியோகஸ்தர் ஒருவர் போலிசாரிடம் கூட்டதின் போது பயமுறுத்தல்களும், அமைதியின்மையும் ஏற்படலாம் என்று முறையிட்டிருந்ததே என்று சொல்லப்படுகிறது.

திரு ஏ. ஈ. குணசிங்கா தலைமை வகித்தார். 40 கமிட்டி அங்கத்தினர், கூட்டத்தில் கலந்துகொண்டனர். உதவிக் காரியதரிசி திரு. ஜீ. எச். அபயசேகரா, திரு குணசிங்கா தொழில் மந்திரி சபைக்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருப்பதால் இனி மேலும் சங்கத் தலைவராய் இருக்கக்கூடாது என்பதே சங்கத்தின் அபிப்பிராயம் என்றும் அதனால் அவர் தமது ராஜினாமாவைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதாகவும் ஓர் தீர்மானத்தைப் பிரேரித்தார்.

திரு. குணசிங்கா இத் தீர்மானத்தைப்பற்றிய சர்ச்சையை அனுமதிக்க முடியாது என்று கூறி இது உரிய காலத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

திரு அபயசேகரா தீர்மானத்தை அனுமதிக்கும்படி செய்ய மீண்டும் முயன்ற போது அவர் ஆசனத்தில் அமரும்படி வேண்டிக்கொள்ளப்பட்டார். பத்திரிகையாளரும் வெளியேறும்படி கூறப்பட்டார்கள்.

அதன் பின் நடந்த கூட்டத்தில் திரு. குணசிங்கா மீது ஒரு நம்பிக்கைத் தீர்மானம் பிரேரிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

பன்னீராயிரம் ரூபாய் தங்கம் பறிமுதல்

ரூ. 2000 அபராதம்

4 ருத்தல் தங்கம் கடத்த முயற்சி

கொழும்பு, அக். 10

கொழும்பில் இருந்து தூத்துக்குடி செல்லும் ஓர் கப்பல் பிரயாணி 12,000 ரூபா பெறுமதியான தங்கத்தைத் தந்திரமாகக் கடத்திச்செல்ல முயலும் போது துறைமுகச் சுங்க அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டார்.

கையில் ஒரு சிறு பாக்கெட்டை வைத்திருந்த மேற்படி பிரயாணி "கொஞ்சம் தேயிலை கொண்டு போகிறேன்" என்று கூறியதாகவும், அதிகாரி "அப்படியா? அப்போ அதை நிறுத்துப் பார்ப்போமே" என்று கூறி அப்பாக்கெட்டைக் கையில் வாங்கிக் கொண்டதாகவும் தெரிகிறது.

ஆனால் பாக்கெட் அதிக பாரமாக இருக்கவே சந்தேகத்துடன் அதிகாரி உள்ளே கையை விட்டுப் பார்த்தார். அப்போது நீலக் கடுதாசிகளில் சுற்றப்பட்டிருந்த உருக்கிய தங்க வில்லைகள் மூன்று காணப்பட்டன. அவை ரூபத்தில் சொக்கிலேட்டுகளை ஒத்திருந்தன என்று தெரிகிறது.

4 ருத்தல் எடையுடன் இருந்த மேற்படி தங்கம் 12,000 ரூபா பெறுமதியுள்ளதாக அனுமானிக்கப்படுகிறது. இத்தங்கம் முழுவதும் பிரஸ்தாப பிரயாணியிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டதோடு, ரு. 2,000 அபராதமும் விதிக்கப்பட்டது.

17,000 ரூபாயைக் காணவில்லை

கொழும்பு, அக். 10

அநுராதபுரம் கச்சேரியில் இருந்து ரூ 17,000 மாயமாய்க் காணாது போய்விட்டதென்று தெரிகிறது.

இது சம்பந்தமாக இப்போது விசாரணைகள் நடைபெற்று வருகிறது.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

சிங்களவர் - தமிழர் ஒற்றுமை சீர்குலைவு

யூ என். பி. சிங்கள வகுப்புவாதிகள் துவேஷ நடவடிக்கைகளே காரணம்

ஏகாதிபத்தியத்தின் இலங்கை தாசர்களை ஒழித்துக்கட்ட வேண்டும்

அகில இலங்கை பௌத்த குருமார் சங்கத்தின் நேற்று முன்தினம் வெளிவந்த 'காலப' என்னும் சிங்களப் பத்திரிகை எழுதிய ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு:-

வகுப்புவாதத்தின் கொடூர தாண்டவம் எத்தகையதென்று அடுத்துள்ள இந்தியாவில் நிகழும் வகுப்புக் கலவரங்கள் நமக்குத் தெளிவாகக் காட்டிக் கொடுக்கிறது

இந்தியாவிலுள்ள முஸ்லிம்களால் பாஸிஸ்ட் கொள்கைகளைக் காப்பியடித்து, ஹிந்துக்களுக்கு எதிராக வைராக்கியத்துடன் பிரசாரம் செய்து வருகிறார்களென்று சமீபத்தில் பண்டித ஜவஹர்லால் நேரு சொல்லியிருப்பதை எவரும் மறந்துபோக முடியாது. பாக்கிஸ்தானின் வகுப்புவாதக் கிளர்ச்சிகளால், இந்தியாவில் இன்று நிகழ்ந்துவரும் இந்த அக்கிரமங்களை சமாளிப்பதற்குபிரிட்டிஷ் சாம்ராஜ்ய ஐக்கிய நாடுகளின் உதவியைக்கூட கோரும்படி நேரிட்டது சமீபத்தில் தான். இந்தியாவில் இந்த வகுப்புவாதத்தினால் தூண்டப்பட்டு நிகழும் அக்கிரமங்கள் அகில உலகத்திற்குமே ஒரு பாடமாய் இருக்கிறது.

இலங்கையின் பரம்பரைக் கீர்த்தி

இந்தியாவில் நடக்கும் இத்தகைய சம்பவங்களால் இலங்கை படித்துக்கொள்ள வேண்டிய பாடங்கள் பலவுண்டு. பலதரப்பட்ட ஜாதி மக்களும், பல்வேறு சமய மக்களும், பற்பல தேச மக்களும் உடன்பிறந்த சகோதரர்கள்போல் ஒற்றுமையாய் கண்யமான சமாதானத்துடன் வாழ்வதில் உலகத்திலேயே கீர்த்தி வாய்ந்தது இலங்கை. தர்மத்திலும், சாந்தத்திலும் கூட நம் தாய் நாடு தலை சிறந்தது. பௌத்தர், ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் ஆகிய பலலட்சக்கணக்கான மக்கள் வருடந்தோறும் சிவனடிபாத (சிரிபாத) த்திற்கு சென்று வணங்குகின்றனர். இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்திலே அமைதியை நிலைநாட்ட ஒரு போலிஸ்காரனின் சேவைகூட இன்றுவரைக்கும் வேண்டியிருக்கவில்லை. வகுப்பு மாற்றமோ, ஜாதிப்பிரிவினையோ, சமயப்பிளவோ இன்று யாவரும் தத்தம் கடமைகளைச் செய்கிறார்கள். பலதரப்பட்ட மக்களிடையே நிலவுகிற இந்த ஐக்கியம் பொருந்திய சகோதரதவத்தைக் கண்ட ஐரோப்பிய நாட்டினர் ஆச்சரியமடைகிறார்கள்; போற்றிப் புகழ்கிறார்கள். சரித்திரப் புத்தகங்களிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். சிரேஷ்டமான இந்த கௌரவமும் கீர்த்தியும் இலங்கைக்கு என்றென்றும் பரம்பரை உரிமையேயாகும்.

சரித்திரம் கூறும் சாட்சி

புராதன இலங்கையிலே சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே எத்தனையோ தடவைகள் யுத்தங்களும் குட்டிச் சச்சரவுகளும் நடந்திருக்கின்றன. முக்கியமாக தென்னிந்தியாவிற்கும் இலங்கை அரசர்களுக்குமிடையே அரசியல் பொருளாதாரத் துறையில் பல சச்சரவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகள் எப்படித்தான் மட்டுக்கு மிஞ்சியிருந்தபோதிலும் இவ்விரு பகுதியினரும் பொதுநன்மையை முன்னிட்டு பற்பல துறைகளில் நெருங்கி ஒத்துழைத்தார்களென்று இலங்கைச் சரித்திரங்கள் சாட்சி கூறுகின்றன.

தமிழ்ப் புலவர்களின் உதார சேவை

தமிழ்ப் புலவர்கள் இலங்கை அரசர்களின் சம்ரட்சணை பெற்று புத்த தர்மத்திற்கும் இலங்கையின் கலாசாரத்திற்கும் புரிந்த உதார சேவையை என்றும் மறக்க முடியாது

இப்படி பரம்பரையாக இங்கே வாழும் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகியோருடன் பிளவையேற்படுத்திச் சச்சரவுகளை உண்டாக்கிவிட சிங்களத் தலைவர்கள் முயற்சி செய்யக்கூடாதென்பது இரகசியமல்ல; மனித சுபாபத்தின்படி சிற்சில சந்தர்ப்பங்களில் இந்நாட்டிலே சிங்கள-தமிழர்களுக்கிடையே சச்சரவுகள் உண்டானதெனினும், அவைகளை நீடித்து விட இரு பகுதியினரும் விரும்பியதில்லை. சமாதானத்திற்கு உழைப்பதுதான் சிங்களவருக்கு தொன்றுதொட்டு இருந்துவந்த லட்சியமாகும். சிங்களவர்களின் இச்சிறந்த லட்சியத்திற்கு அநுகூலமாய் இருந்தது புத்த தர்மமேயாகும்.

பொது எதிரியை எதிர்ப்பதில் ஒற்றுமை வேண்டும்

விசேஷமாக அகில இலங்கையும் இங்கிலீஷுகாரர்களுக்கு பராதீனமாய் இருந்த காலத்தில் சிற்சில சமயங்களில் இவர்களிடையே வகுப்பு வாத பேதம் இருந்திட்டபோதிலும் இனிமேலும் அவற்றை கெடுபிடியாய் நீடித்து வருவதை மறந்துவிட வேண்டும். தமிழருக்கும் சிங்களவருக்கும் பொது எதிரியான ஏகாதிபத்யக்காரர்களையும், இவர்களின் இலங்கைத் தாசர்களையும் ஒழித்துக் கட்டுவதில் நமமிடையேயுள்ள அபிப்பிராய பேதங்களையும், அவநம்பிக்கையையும் பெருக்கெடுத்துப்பாயும் சமுனிகங்கையில் ஆழ்த்திவிட வேண்டும். இதுதான் நமது முக்கிய கடமையாய் இருக்கவேண்டும். இப்படியிருந்தால் தான் பொது எதிரியை முறியடிக்க முடியும். அன்றேல் நமமில் நாமே முட்டிக்கொள்ள நேரிடும்; அப்படித்தான் நேரிட்டிருக்கிறது.

விடுதலை வேண்டும்.

இலங்கையர்கள் ஒரே வர்க்கமாகி ஒற்றுமையுடன் முன்னணிவகுத்து, தேசத்தின் அரசியல்- பொருளாதார விடுதலைக்கும், பாதுகாப்புக்கும், முன்னேற்றத்திற்கும உழைக்கவேண்டுமேயொழிய; சமயம்-ஜாதி குலம்-பிரதேசம்-உயர்வு- தாழ்வு என்றெல்லாம் பிளவுபடுத்திக்கொண்டே போனால், எங்களுக்கு-இலங்கைக்கு- ஏற்படுவது பயங்கரமான ஆபத்து தான் என்பதில் சந்தேகமில்லை

காலரீதியான நடவடிக்கை

இவை யெல்லாம் வர்த்தமான உலகத்தில் முக்கிய பிரச்னைகள் ஆகமாட்டா. வர்க்கப் போராட்டம் தான் சமுதாயத்தின் முன்னணியான-விலக்க முடியாத-பிரச்னையாய் இருக்கும். இதைத் தீர்க்க வேண்டுமாயின், அரசியல்-சமூக-பொருளாதார-தொழில் துறைகளை காலதேசவர்த்தமானத்தையொட்டி சாஸ்திரீய முறையில் உசிதமான முறையை உடனே கையாளவேண்டும். அன்றேல் விதேசிய அதிகார வர்க்கத்திற்கு இந்நாட்டில் இன்னும் பலமடைய ஹேதுவாய்விடும்.

காட்டிக்கொடுக்கும் துரோகிகள்

இன்று வரைக்கும் அந்நியர்களுக்கு, இலங்கையை ஆட்சி செய்ய சுலபமாய் இருந்ததற்கு காரணம், இததேச மக்களைக் காட்டி, பெரிய பட்டம் பதவியும் பெற்று, தம் குடும்பச் செலவாக்கை பரம்பரையாக அபிவிருத்தி செய்து பாதுகாக்க விரும்பிய சில தான்தோன்றி சிங்களவர்கள்தான். இந்த தான்தோன்றிகள் இன்னும் விரும்புவதும், முயற்சி செய்வதுமென்னவென்றால், தேச மக்களின் பொது வாழ்வுக்கு ஆதாரமாய் இருக்கும் ஜீவாதார உரிமைளை தத்தம் குடும்பங்களுக்குமட்டும் அனுபவிக்க அடிகோலி வைப்பதேயாகும். சுயநலவாதிகளான இவர்கள், தேசத்தைச் சூறையாடும் அந்த சாம்ராஜ்ய வாதிகளுக்கு பந்தம் பிடிப்பதற்கு நானே நீயோ முந்தி என்று முட்டிக்கொள்ளுகிறார்கள்.

வகுப்புப் பகையை உண்டாக்கும் யூ. என். பி.

எனினும் இந்த செப்படிவித்தைகளையெல்லாம் அறிந்த பொது மக்கள் இப்பொழுது கண் விழித்துவிட்டார்கள். அறிவுள்ள மத்தியதர வகுப்பினரிடையேயும் வாழ்க்கைத்தேவைக்காக தம் சிரமசக்தியை விற்று ஜீவிக்கிற பொது மக்களிடையேயும் எவ்வித சிங்கள-தமிழ் பேதமோ ஒற்றுமைக்குறைவோ இல்லை. இந்நாட்டு பலதரப்பட்ட வகுப்பு மக்களிடையே இருக்கும் ஒற்றுமையையும் நல்லெண்ணத்தையும் நாசமாக்கி விடவும் ஐ தே. கட்சியினர் போன்ற துவேஷிகள் தான் சிங்கள-தமிழர்களிடையே வகுப்புப் பகையை உண்டாக்கி விடவும், சரியான பிரயத்தனங்களை செய்வதாகத் தெரிகிறது. வருங்காலத்தை தூரதிருஷ்டியோடு பார்க்காது இலாத பூசல்பிடித்த பகையையும் பிளவுகளையும் உண்டாக்கி இந்தியாவைப் போன்று இலங்கையிலே செய்துவிட எண்ணும் அரசியல் குரும்பக்கார தலைவர்களை ஒழித்துக் கட்ட இது தான் தகுந்த தருணம்.

அந்நிய நாட்டு ஐந்தாம் படைகள்

அமெரிக்க ராஜாங்க இலாகாவில் இடமில்லை

சர்க்கார் அறிவிப்பு

வாஷிங்டன், அக் 7

கமியூனிஸ்டு நாஜி பாஸிஸ்டு ஸ்தாபனங்களின் அங்கத்தினர்களும் அந்நிய சர்க்கார்களுக்காக உழைப்பவர்களென்று நம்பப்படுவோருடன் நெருங்கிய தொடர்பு உள்ளவர்களும் பாதுகாப்புக்கு அபாயம் விளைவிப்பவர்கள் என்பதால் அமெரிக்க ராஜாங்க இலாகா உத்தியோகங்களுக்கு வரக்கூடாதென்று அமெரிக்கசர்க்கார் இன்று உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறது மற்ற நாடுகளுக்கு அமெரிக்கா பண உதவி அளிப்பது ராஜாங்க இலாகாமூலம் நடக்கிறது இது சம்பந்தமாக உளவு அறிய விரும்பும் உளவாளிகள் இதனால்தான் ராஜாங்க இலாகாவைக் குறிவைத்து வருகிறார்கள்.

ஹைதராபாத்-இந்திய சர்க்கார் சம்பாஷணை

சத்தாரி நவாப் கோஷ்டி டில்லி செல்லும்

ஹைதராபாத், அக். 8

ஹைதராபாத் சமஸ்தான சர்காரோடு பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக, ஸ்ரீ வி. பி. மேனன் தலைமையில் ஒரு கோஷ்டியை அனுப்பவேணடுமென்று முடிவு செய்யப்பட்டது இப்போது ரத்துசெய்யப்பட்டிருக்கின்றது. ஹைதராபாத் சம்பாஷணைக் கமிட்டி மெம்பர்களாகிய சத்தாரி நவாப் சமஸ்தான ஆலோசகர் சர். வால்டர் மாக்டன், அலிநவாஸ், ஜங்நவாப் ஆகிய மூன்று பேரும் அக்டோபர் 9-ம் தேதி டில்லி சென்று இந்திய சர்க்காருடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவர்.

இந்தியா பிரதம சேனாதிபதி

மாதக் கடைசியில் லண்டனுக்கு மூட்டை கட்டுவார்

புதுடில்லி, அக் 8

இந்தியசர்க்கார் கூட்டு ராணுவத்தைக் கலைத்து விடுவதாலும் இந்தியாவின் ராணுவம் முழுவதும் இந்திய மயமாக்கப்படுவதாலும் இந்தியா பாக்கிஸ்தான் பிரதம சேனாதிபதியான பீட்டு வார்ஷல் சர் கிளாட் ஆச்சினலக் இம்மாதம் மூன்றாவது வாரத்தில் பதவியை விட்டு விட்டு லண்டனுக்குப் பயணமாவார் என்றும் தெரிகிறது. இந்தியாவிலும் பாக்கிஸ்தானிலுமுள்ள பிரிட்டிஷ்ராணுவத்தை துரிதமாக பிரிட்டனுக்கு வெளியேற்றியனுப்ப ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

கிழவியைத் தாக்கியதாக சகோதரர்கள் மீது வழக்கு

தலைக்கு ரூபாய் 3000 பிணையில் விடுதலை

கொழும்பு அக் 10

நாகலிங்கம், தம்பிராஜா என்னும் இரு சகோதரர்கள் பரணிப்பிள்ளை என்னும் வயோதிப மாதைத் தடிகொண்டு தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள்.

தம்பிராஜா சோம்பேறியாய் இருந்ததாக மேற்படி பெண் முறுமுறுத்ததே சம்பவத்தின் ஆரம்பம் என்று தெரிகிறது.

இப்போ இவ்விரு சகோதரர்களும் தலைக்கு 3000 ரூபாய் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கைதுசெய்யச் சென்ற போலிஸார் மீது தாக்குதல்

எழுவர் கோர்ட்டில் ஆஜர்செய்யப்பட்டனர்

அவிசாவளை, அக். 10

ஸமி, ஜினதாச என்ற இரு வரை ஒரு கொள்ளை சம்பந்தமாகக் கைதுசெய்ய முயன்ற போலிஸ் கோஷ்டி, ஒரு கூட்டம் ஆண்களாலும் பெண்களாலும் தாக்கப்பட்டது. இத்தாக்குதலில் பங்கு பற்றிய எழுவர் அவிசாவளை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆஜர்செய்யப்பட்டனர்

இவர்கள் மீது வாள், உலக்கை, இரும்புப் பொல்லுகள், கத்திகள் போன்ற அபாயகரமான ஆயுதங்களோடு போலிஸாரை அவர்களது கடமையைச் செய்ய விடாது தடைபுரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

வழக்கின் விசாரணை இன்னோ தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

பூந்தோட்டத்திற் கருகே கள்ளுத் தவறணை

நீர்கொழும்பு மக்களின் எதிர்ப்பு

நீர்கொழும்பு, அக். 10

இங்குள்ள ராஜபக்ஷ பூந்தோட்டத்திற்கு அருகாமையில் ஒரு கள்ளுத் தவறணை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதனை ஆட்சேபித்து விவசாய மந்திரிக்கும் நிலக் கமிஷனருக்கும் பொது மக்கள் சார்பில் புகார்கள் செய்யப்பட்டுள்ளன. மைதானத்திற்கு சிறுவர் சிறுமியர் வந்துபோவதை இது பெரிதும் பாதிக்குமென்பது முக்கிய காரணமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

படுக்கை அறையிலே துப்பாக்கிப் பிரயோகம்

குண்டு சுவரைத் துளைத்தது

களுத்துறை, அக். 10

தனது படுக்கை அறையிலிருந்து செவ்வாய்க்கிழமையிரவு வெளியே வந்த திரு. ரிச்சர்ட் டி. அல்விஸ் என்பவர் ஓர் துப்பாக்கியால் சுடப்பட்டார். ஆனால் அதிர்ஷ்டவசமாக அவருக்குக் காயமேற்படாது போகவே துப்பாக்கி ரவை ஜன்னலை உடைத்துச்சென்று படுக்கை அறைச் சுவரைத் துளைத்தது.

இது சம்பந்தமாக அதே கிராமத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மத்துகமைத் தேர்தலின் போது மேற்படி இருவரும் ரிச்சர்ட் டி அல்விஸ் ஆதரித்த அபேட்சகருக்கு எதிராக வேலை செய்தவர்கள் என்று சொல்லப்படுகிறது.

ஆடிட்டர் ஜெனரலின் சம்பளக் கோரிக்கை

கொழும்பு, அக். 9

ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் மந்திரி சபைகளின் நிரந்தரக் காரியதரிசிமாருக்குக் கொடுக்கப்படும் சம்பளம் தனக்கும் தரப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

வருடம் ஒன்றுக்கு 2000 பவுணில் இருந்து 2200 பவுண் வரை நிரந்தரக் காரியதரிசியாரின் சம்பளமாக நிர்ணயிக்கப்படும் என்று தெரிகிறது.

டாக்டர் ராதாகிருஷ்ணன் மேல்நாடு பயணம்

கராச்சி, அக். 8

காசி சர்வகலாசாலை உப அத்தியட்சகரும் இந்திய அரசியல் நிர்ணய சபை அங்கத்தினருமான டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் லண்டன் செல்லும் மார்க்கத்தில் புது டில்லியிலிருந்து இன்று இங்கு வந்து சேர்ந்தார். அவர் அக்டோபர் 20-ம் தேதிவரை லண்டனில் தங்கிவிட்டு பிறகு மெக்ஸிகோ நகருக்கு நியூயார்க்மார்க்கமாகப் போய்ச்சேருவார் அங்கு ஐக்கிய தேச சமூக பொருளாதார கமிஷன் கூட்டத்திற்கு விஜயம் செய்வார். இந்தியா சுகாதார மந்திரி ஸ்ரீமதி அமிர்த கௌரும் மற்ற இந்தியா பிரதிநிதிகளும் அக்கமிஷன் கூட்டத்திற்கு விஜயம் செய்வார்கள். (அ-பி.)

ஜெய் ஹிந்த்!

இலங்கை இந்திய ஹரிஜன சேவா சங்கம்

தீண்டாமையை அறவே ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்ட இச்சங்கத்தில் சேர விரும்புவோர், வருடசந்தா ரு. 1-00 கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி அங்கத்தவராகும்படி வேண்டுகின்றோம்.

பி. என். குமாரசாமி
காரியதரிசி
இ. இ. ஹரிஜன சேவா சங்கம்,
25-20 கிவ்லேன், கொழும்பு 2.

மொத்த வியாபாரிகளுக்கோர் சந்தர்ப்பம்.

ஷாப்புச் சாமான்களில் உங்களுடைய தேவைகளுக்கு இலங்கையில் இறக்குமதியாளர்களில் முன்னணி வகிக்கும் எங்களை வினவிக்கொள்ளுங்கள். கீழ்க்கண்ட பண்டங்களில் நாங்கள் முக்கியத்துவம் பெற்றவர்கள்:-

லசிஞ்சர்ஸ், சாக்லேட்ஸ், இங்கிலீஷ் பிஸ்கட் தினுசுகள், டின்பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலீஷ் மருந்துகள், டொய்லட் தயாரிப்புகள், நூல் வகைகள், சிகரெட்டுகள், இன்னும் பலவித சாமான்கள்,

கவனிப்பு:-
அயலூர் வியாபாரிகள் மாதிரிப் பட்டியல் (Pro-forma Invoices) களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

O. N. ASSEN MOHAMED & Co.,
Dam Street, COLOMBO.
Grams: "JUST" Phone: 4057

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது

தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:—

ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டி ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்

தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.

ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்
இம்மூன்றிலும் முதல்தரமானது வேண்டுமென்றால்
குயின் (ராணி) மார்க்கே
பார்த்து வாங்குங்கள்



குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி
297 & 307 சீ ஸ்டிரீட் (செட்டியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபம் மரைக்காயருக்கு அபராதம்

மீன் பிடிப்போரைக் கட்டிவைத்தாராம்

ராமனாதபுரம், அக் 9

மீன் பிடிப்போர் சிலரைக் கட்டிவைத்ததாக இ. பி. கோ. 114, 342-வது பிரிவுகளின்படி கார்குடி, உரத்தூர் ஜமீன்தாரான மண்டபத்தைச் சேர்ந்த அப்துல்ரஹ்மான் மரைக்காயர் மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்டிருந்த வழக்கில் கோர்ட்டார் அவருக்கு 200 ரூபாய் அபராதம் விதித்தார்கள். அபராதம் கொடுக்கத் தவறினால் 4 மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள்.

அமெரிக்காவின் தங்க இருப்பு அதிகரிக்கிறது

ரஷியா விற்ற தங்கமும் சேர்ந்தது

வாஷிங்டன், அக். 9

இவ்வருடம் செப்டம்பர்மாதமத்தியில் ரஷியா 5,662,636 டாலர் பெறுமதியான தங்கத்தை அமெரிக்காவுக்கு விற்பனை செய்திருக்கிறது. இப்பொழுது அமெரிக்காவின் தங்க இருப்பு 226,720 லட்சம் டாலராக அதிகரித்திருக்கிறது. கிட்டத்தட்ட 1941-வது வருடத்திய இருப்பின் அளவுக்கு வந்துவிட்டது. 1941-வது வருடம் அமெரிக்காவின் தங்க இருப்பின் விலை மதிப்பு 227,490 லட்சம் டாலராகும்.

சைனாவில் பிரிட்டிஷ் தூது கோஷ்டி

நாங்கிங், அக். 9

லார்டு அம்மோன் தலைமையில் 6 பிரிட்டிஷ்பார்லிமெண்ட் அங்கத்தினர்களடங்கிய பிரிட்டிஷ் தூதுகோஷ்டியார் இன்று இங்கு வந்து சேர்ந்தனர். சைனாவுடன் பிரிட்டன் நல்லுறவு கொள்ளவே தூதுக்கோஷ்டி வந்திருப்பதாக தலைவர் தெரிவித்தார். இக் கோஷ்டி சைனா வரும் வழியில் ரங்கூனில் தங்கியபோது கொலையுண்ட 7 மாஜி பர்மா மந்திரிகள் பிரேதங்களுக்கு பூச்செண்டு சாற்றி மரியாதை செலுத்தினர். ஜெனரல் மக்ஆர்தர் அனுப்பின் மீது இவர்கள் ஜப்பானுக்கு விஜயம் செய்வார்கள். [ராய்ட்டர்]

எலிஸபெத் இளவரசி விவாகம்

சர்க்கார் விடுமுறை கிடையாது

லண்டன், அக். 9

நவம்பர் 20-ம் தேதி எலிஸபெத் இளவரசிக்கு விவாகம் நடைபெறுகிறது. அன்று சர்க்கார் விடுமுறை கிடையாது பள்ளிக்கூடங்களுக்கு மட்டும் விடுமுறையளிக்கப்படும். பொருளாதார நெருக்கடியை முன்னிட்டு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பள்ளிச் சிறுவர்களுக்கு சிக்கனமான முறையிலே தின் பண்டங்கள் வழங்கப்படும்.

அக்டோபர் 21-ம் தேதி பிரிட்டிஷ் பார்லிமெண்டு கூட்டத்தை ஆரம்பித்து வைக்க மன்னரும் ராணியும் விஜயம் செய்யும் போது எலிஸபெத் இளவரசியும் உடன் செல்வார்.

டச்சு இளவரசி ஜூலியானா

தாய்க்குப்பதில் சிம்மாசனம் வகிப்பார்

ஹேக், அக். 9

தேக நிலையை உத்தேசித்து தற்காலிகமாக சிம்மாசனத்திலிருந்து விலகி ஓய்வெடுக்கும் டச்சு ராணி விலம்ஹெல்மினாவுக்குப் பதில் அவரது புத்திரி இளவரசி ஜூலியானா சிம்மாசனம் வகிப்பதற்கு நாளை கூடும் பார்லிமெண்டு ஓர் சட்டத்தை நிறைவேற்றும்.

இளவரசி ஜூலியானாவுக்கு நான்காவது பெண் குழந்தைக்கு இன்று ஞானஸ்நானம் நடைபெற்றது. இந்த விசேடத்திற்கு வின்ஸ்டன் சர்ச்சிலுக்குப்பதில் அவரது புத்திரி விஜயம் செய்திருந்தார். (ராய்ட்டர்)

மார்ஷல் திட்ட உதவியின்றேல்

ஐரோப்பா மோசம் போய்விடும்

பிரஞ்சு அந்நிய நாட்டு மந்திரி அலறுகிறார்

நியூயார்க், அக். 9

இங்கிருந்து பாரிசுக்கு விமானத்தில் திரும்பும் சமயம் பிரஞ்சு அந்நிய நாட்டு மந்திரி பின்வருமாறு தெரிவித்தார்:-

மார்ஷல் திட்ட உதவி கிடைக்காவிடில் ஐரோப்பா தனது சுதந்திரத்தை இழந்து விடும் மார்ஷல் திட்டம் அமுல் செய்யப்படுமென்றே கருதுகிறேன். இது சம்பந்தமாக நான் ஜனாதிபதி ட்ரூமனுடனும் அந்நிய நாட்டு மந்திரி மார்ஷலுடனும் கலந்து பேசியதில் திருப்தி கொள்கிறேன். (ராய்ட்டர்)

வேலையில்லாத் திண்டாட்டம்

கொழும்பில் 20,000 பேர் வேலைகுத் தவிக்கின்றனர்

கொழும்பு, அக். 10

கொழும்பில் வேலையில்லாதவர்களுக்கு வேலை பெற்றுக் கொடுக்கும் காரியாலயத்தில் சென்ற செப்டம்பர் மாதம் வரைக்கும் வேலையின்றி இருப்பவர்களெனப் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 19,490 பேர் ஆவர்.

ஆனால் உண்மையில் கொழும்பில் வேலையின்றி இருப்பவர்களின் எண்ணிக்கை இன்னும் அநேகமாகவே இருக்குமென்று எண்ணப்படுகிறது.

இக்காரியாலயத்தில் அரிசிக் கூப்பன் உள்ளவர்களின் பெயர்களே பதிவுசெய்து வைக்கப்பட்டிருக்கிறது. கூப்பனின்றி, தமக்கு வேலை தேடிக்கொடுக்கும்படி கேட்பவர்களின் பெயர்கள் இங்கு பதியப்படுவதில்லை.

கண்டியில் 4663 பேரும், காலியில் 2221 பேரும், களுத்துறையில் 1492 பேரும், நீர்கொழும்பில் 1307பேரும் வேலை தேடிக்கொடுக்குமாறு அவ்விடங்களிலுள்ள காரியாலயங்களில் பதிவு செய்திருக்கிறார்களாம்.

வெங்காயத் தட்டுப்பாடு

165 தாதிகளுக்கு கால் ரூத்தல் வெங்காயமா?

கொழும்பு, அக். 10

கொழும்பிலுள்ள ஐக்கிய பண்டகசாலைகளில வெங்காயத் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கொழும்பு ஸிவில் ஆஸ்பத்திரியில் வேலை பழகும் 165 தாதிகள் இந்தக் கிழமையில் தங்கள் உணவுக்கு வெங்காயத்தை உபயோகிக்க முடியாமற்போய்விட்டது.

இந்த 165 தாதிகளின் அரிசிக் கூப்பன் புஸ்தகங்களையும் சென்ற புதன்கிழமை ஐக்கிய பண்டகசாலைக்கு அனுப்பப்பட்டபொழுது, அவற்றிற்குக் கொடுக்கவேண்டியஉணவு,உபஉணவுப் பொருட்களுடன் கால் ரூத்தல் வெங்காயம்தான் கொடுக்கப்பட்டதாம் இந்தக் கால் ரூத்தல் வெங்காயம் 165 பேருக்குமாக கொடுக்கப்பட்டதாகும்.

ஆனால் பல சங்கக்கடைகளில் 40 சதம் தொடக்கம் 60 சதம் விலைவரைக்கும் ஒரு ரூத்தல் வெங்காயத்துக்குக்கொடுத்தால் வேண்டிய அளவு வெங்காயத்தைப் பெற்றுகொள்ளலாம் என்று கூறப்படுகிறது.

லைசென்ஸ இல்லாத துப்பாக்கி

மட்டக்களப்பு, அக். 9

லைசென்ஸ் இல்லாமல் துப்பாக்கி வைத்திருந்த குற்றத்திற்காக ஏறாவூர் போலீஸ் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி காத்தமுத்து என்பவனுக்கு ரூபாய் 25 அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. (ந-நி)

தந்திக் கம்பியை அகழ்ந்தெடுத்து விற்றனர்

இருவர் மீது குற்றத் தீர்ப்பு

கொழும்பு, ஆக. 9

மாளிங்க டவுனிலுள்ள தந்தி ரேடியோ நிலையத்தின் பின்புறமாக நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த ஆயிரம்அடி தந்திக்கேபிளை அகழ்ந்தெடுத்து விலைக்கு விற்றதாக சைமன், பீட்டர் பெரேரா என்ற இருவர் மீதும் தொடரப்பட்ட வழக்கின் விசாரணை முடிவடைந்துவிட்டது.

நீதிபதி எக். ஜே. ஆர் குணவர்த்தனா எதிரிகள் குற்றவாளிகளெனத் தீர்ப்பளித்தார். ஆனால் தண்டனை அக்டோபர் மீ-ம் தேதி நிர்ணயிக்கப்படும்.

சிறுபான்மையோர் பாதுகாப்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துடன் 757,037 முஸ்லிமல்லாத அகதிகளை அப்புறப்படுத்தினோம். இவர்களில் 1027 பேர் விமான மார்க்கமாகவும், மூன்றரை லட்சம் பேர் ரயில் மார்க்கமாகவும் 121,010 பேர் மோட்டார் மூலமாகவும் 285,000 பேர்கள் அணி வகுத்துக் கால்நடையாகவும் அப்புறப்படுத்தப்பட்டனர். இன்னும் மூன்று லட்சம் பேர் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் 20 லட்சம் பேர் மேற்குப் பஞ்சாபிலிருந்து வெளியேற இருக்கிறார்கள். அவர்களில் 6 லட்சம் பேர்கள் முற்றுகைகளில் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மீதமுள்ள 14 லட்சம் பேர்களில் 7 லட்சம் நகர்ப் புறங்களிலும் மற்றவர்கள் கிராமாந்தரங்களிலும் நிக்கிறார்கள்.

வெளியார் தலையீடு

லண்டன், அக். 6

'டெய்லிவொர்க்கர்'என்றபத்திரிகையில் கமியூனிஸ்ட் எழுதாளர் பால்மி தத்தர் 'இந்தியத்வின் அபாய வேளை' என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதுகிறார்:- பண்டித நேருவையாளும் உறுதியான கொள்கை இந்தியாவில் வெளிநாட்டார் தலையீட்டிற்கு இடங்கொடாதபடி யிருப்பதால அதை ஆதரிக்கிறோம். இந்தியாவின் அபாயமான இந்த வேளையில் இந்தியாவின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க காந்தி, நேரு, சோஷியலிஸடுகள், கமியூனிஸடுகள் உட்பட எல்லோரும் ஏகோபித்து ஐக்கிய முன்னணி ஏற்படுத்த வேண்டுமென இந்திய கமியூனிஸட் கட்சி பிரகடனம் செய்திருப்பதை இந்தியாவின் நண்பர்கள் அனைவரும் வரவேற்கிறார்கள். பழைய ஏகாதிபத்தியக் கொள்கையும் அதைத் தழுவிக் கொண்டிருக்கும் உள்நாட்டுப் பிற்போக்கு வாதிகளின் கிளர்ச்சியுமே இந்தியாவுக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும்தொல்லைக்குக் காரணமாகும் மவுண்ட் பேட்டன் திட்டப்படி பிரிட்டன் அளித்த தீர்ப்பால் ஏற்பட்ட நாட்டின் பிளவும் இதற்குக் காரணமாகும் என்பதைஎவரும் மறக்கலாகாது. ஏகாதிபத்திய வாதிகள் மீண்டும்தலையிடும்நோக்கத்துடனேயே, இந்தியாவைப் பிளந்து சுயராஜ்ய வழங்கினர். இது இந்திய ஐக்கியத்தைச் சீர்குலைக்க பிரிட்டனால் ஏற்பட்ட ஒரு வெடிகுண்டாகும்.

இந்த சூழ்ச்சிகளையெல்லாவற்றுக்கும் மேலாக அந்நியர் தலையிடாது நாட்டைப் பாதுகாக்க பண்டித நேருவும் அவரது சர்க்காரும் தலைநிமிர்ந்து மார்தட்டி உறுதி கொண்டு நிற்கிறார்கள் இந்திய தேச பக்தர்களும், ஜனநாயக உலகமும் இந்திய சுதந்திரத்தைப் பாதுகாக்க நடைபெறும் முயற்சிகளை ஆதரிப்பார்கள். புது முறையான இப்போராட்டத்திற்கு இங்குள்ள நாங்கள் எங்கள் முழு ஆதரவையும் அளிக்கிறோம்.

பிரிட்டிஷார் சீக்கிரம் வெளியேற வேண்டும்

லண்டன், அக். 9

கேப்டன் போலார்ட் 'டெய்லிடெலிகிராப்'பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்:-

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷார் வெளியேற, பிரிட்டிஷ் சர்க்காருக்கு கப்பல் கிடையாவிடில் விமானங்களை அனுப்பியாவது அவர்களை வெளியேற்ற வேண்டும். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் குடும்பங்கள் மனக்கலக்கமும் தவிப்பும் சங்கடமுமுடையவர்களாக இருக்கிறார்கள்.

கராச்சியில் ஆச்சின்லெக்

கராச்சி, அக் 9

இந்தியா பாக்கிஸதான் கூட்டு ராணுவ தளபதி ஆச்சின்லெக் இன்றுபாக்கிஸதான் ராணுவ அமைப்பு சம்பந்தமாக ஜனாப் ஜின்னாவுடன் கலந்து ஆலோசனை செய்தார்.

புதிய கார்கள் வாங்க நவம்பர்மாதம் 'பெர்மிட்' தேவையில்லை

கொழும்பு, அக். 11

யுத்த காலத்தில் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து புதிய மோட்டார் கார்கள் பெற்றுக்கொள்ளுவது கஷ்டமாக இருந்தது. இதன் காரணமாக இலங்கையில் புதிய கார்கள் அத்தியாவசியமான தேவையாளர்களுக்கு மோட்டார் போக்குவரத்துக் கட்டுப்பாட்டதிகாரியின் உத்தரவுச் சீட்டின் பேரிலேயே வழங்கப்பட்டது.

இப்பொழுது பிரிட்டன் அமெரிக்கா முதலிய நாடுகளில் மோட்டார் உற்பத்திச் சாலைகளில் இப்பொழுது யுத்தத்திற்கு முன்னுள்ள நிலைமையைப் போன்று மோட்டார் கார்கள் உற்பத்தியாக்கப்படுகின்றன. எனவே, இலங்கையில் புதிய கார்கள் வாங்குவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடு இம்மாதத்துடன் முடிவடையும். அடுத்த மாதந் தொடக்கம் புதிய கார்கள் "பெர்மிட்" இன்றிப் பெற்றுக்கொள்ள வசதியுண்டு.

சென்ற சில மாதங்களாக இலங்கையில் பெட்ரோல்,மோட்டார் கார்கள் முதலியவற்றின் கட்டுப்பாட்டை எடுத்து விடும்படி பொதுஜனக் கிளர்ச்சி இருந்தது.

முதன் முதலில் புதிய கார்களுக்கும் பழைய கார்களுக்கும் கட்டுப்பாடு இருந்தது. சில மாதங்களுக்கு முன் பதாக பழைய கார்களின் கட்டுப்பாடு எடுக்கப்பட்டது.

இப்பொழுது புதுக் கார்களுக்கும கட்டுப்பாடு தேவையில்லையென்று அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இப்பொழுது இங்கு புதிதாக இறக்குமதியாக்கப்பட்டுள்ள ஸி. ஒய் எழுத்திடப்பட்டுள்ள கார்கள் 5000-க்கு மேல் ரஸ்தாக்களில் ஓடுகின்றன. மிகவும் கெதியில 9999 ஆகிவிடும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இவ்வெண்ணிக்கை வந்ததும் ஸி, எல் என்ற புதிய எழுத்துக்களிடப்படுமாம்.

உணவுக் கட்டுப்பாடு நடவடிக்கை

ஊர்காவற்றுறை, அக். 8

ஊர்காவற்றுறை ஐக்கிய மொத்த வியாபாரச் சமாசத்திலிருந்து வாரம் ஒன்றுக்கு 100 அரிசிக் கூப்பன் விகிதம் மேலதிகமாகக் கணக்கில் பதிந்து யாழ்ப்பாணம் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியிடமிருந்து அரிசி, சீனி முதலிய பொருட்களைப்பெற்றுள்ள மார்க்கெட்டில் விற்று வருவதை விசாரணையில் அறிந்து உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் கிளார்க் ஒருவரையும் ஐக்கிய சமாசத்தின் கிளார்க் ஒருவரையும் தற்காலிகமாக வேலையின்றும் நிறுத்தி வைத்து உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி தீவுப்பகுதிகளின் பண்டசாலைகள் ஒவ்வொன்றிற்கும் சென்று பரிசீலனை செய்து வருகிறார். (ந-நி)

நெடுந்தீவு நிர்வாகம்

ஊர்காவற்றுறை, அக். 8

நெடுந்தீவில் சென்ற இவ்வளவு காலமும் தனிமையான மணியக்காரர் டி. ஆர். ஓ. மார் இருந்து கடமையாற்றி வந்தனர். இத்தீவு யாழ்ப்பாணப் பட்டினத்தோடு நெருங்கிய போக்கு வரவு முதலியவற்றை யோசித்து இவ்வித வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இப்பொழுது அரசினர் ஆங்கிருந்தடி. ஆர். ஓ அவர்களை மாற்றி நெடுந்தீவையும் ஏனைய தீவுகளுடன் இணைத்து விட்டனர். (ந-நி)

துணிக் கஷ்டம்

ஊர்காவற்றுறை, அக். 9

ஊர்காவற்றுறை மார்க்கெட்டில் துணிகள் பெறுவது மிகவும் கஷ்டமாகவிருக்கின்றது ஏனெனில் கட்டுப்பாட்டு விலைக்குப்பெற முடியாது துணிகள் கூடிய விலைக்கே விற்கப்படுகின்றது. பொதுஜனங்கள் கூப்பன்களைக் கொண்டு ஜவுளிக் கடைகளுக்குச் சென்றால் துணிகள் கிடையாது; ஆனால் கூடிய விலையில துணிகள் எவ்வளவும் பெற்றுக் கொள்ளலாம். (ந-நி)

பாலஸ்தீன எல்லையில் எகிப்து, சிரியா படைகள்

(1-ம் பக்கத் தொடர்)

யும் இணைக்கும் ரயில்வே ஜங்ஷனிருக்கிறது.

குர்திவகுப்பினர் தங்களுக்கு தனி சுதந்திரம் வேண்டுமென்று புரட்சி செய்தனர்.

சென்ற ஜூன் மாதம் குர்திமலை ஜாதித் தலைவர் அல்பராஸானி, ஈராக் சர்க்காருக்கு விரோதமாகப் புரட்சிசெய்து பாரசீகத்திற்கு ஓடி பாரசீக சர்க்காரால் முறியடிக்கப்பட்டார்.

பாலஸ்தீன விடுதலைக்கு அமெரிக்கா லீக்

நியூயார்க் அக் 9

அமெரிக்காவிலுள்ள டாலர் முதலாளிகள் பாலஸதீனத்தில் யூதர் சுதந்திரத்தை ஸதாபிக்க முயற்சி செய்து வருகிறார்கள் யூதர்களை சட்டவிரோதமாக பாலஸதீனத்தில் குடியேற்ற தூண்டுவதற்கு இங்கு பாலஸதீன சுதந்திர அமெரிக்கா லீக் என ஒரு ஸதாபனத்தை நிறுவியிருக்கிறார்கள். இந்த ஸதாபனம் யூதர்களுக்கு ஏராளமான பண உதவி செய்து வருகிறது. இவர்கள் அமெரிக்காவிலிருந்து கொண்டு பாலஸதீனத்தில்யூதர்களின் புரட்சியை நடத்துகிறார்கள். 4000 மைல்களுக்கப்பால் இருந்து கொண்டு இந்த அமெரிக்கர்கள்பாலஸதீனத்தில் பிரிட்டிஷ் ராணுவத்திற்கு விரோதமான யூதர் புரட்சிக்கு ஆதரவளித்து வருகின்றனர். யூதர் பயங்கர புரட்சி ஸ்தாபனமான 5000யூத வெறியர்களடங்கிய இர்குனுக்கு இந்த அமெரிக்கா லீக பண உதவி செய்கிறது. அமெரிக்காவில ஏராளமான பணம் திரட்டும் சக்தி வாய்ந்தது இந்த அமெரிக்கலீக். இதன் தலைவர் அயோவா மோகாணத்தின் மாஜி செனட்சபை பிரதிநிதி கில்லெட். இன்னும் பல பிரமுகர்கள் இதில் அங்கத்தினர். இதற்கு மொத்தம் 140,000 அங்கத்தினர்களிருக்கின்றனர். இது 1944-வது வருடம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஸ்தாபனத்திற்கு வாஷிங்டன், பிலடெல்பியா, சிகாகோ, லாஸ் ஏஞ்சல்ஸ், போஸடன் ஆகிய நகரங்களில் கிளைகள் இருக்கின்றன. பாலஸதீனத்தில் ஹீப்ரு குடியரசை ஸதாபிக்கும் நோக்கத்துடன 75 லட்சம் டாலர் அதாவது 1875 ஆயிரம் பவுண் நிதிதிரட்டியிருக்கின்றனர் பாசிசத்திலிருந்துதப்பி பாலஸ்தீனம் சென்ற யூதர்கள் இந்த அமெரிக்கா லீகின் நடவடிக்கையால் தாங்களே பாசிஸ்டுகளாகமாறி விட்டனர்.

டிராமில் பொத்தானைக் கத்தரித்தெடுக்க முயற்சியா?

எதிரிக்கு 1000 ரூபாய் பிணை

கொழும்பு, அக். 10

சீதுவையைச் சேர்ந்த ஒரு ஆசிரியர் டிராமில் பிரயாணம் செய்யும்போது அவரது கோட்டிலுள்ள ரூ 70 பெறுமதிவான தங்கப் பொத்தான் ஒன்றைக் கத்தரித்தெடுத்ததாக பாலத்துறை நோர்மன் சில்வா கொழும்பு உதவி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆஜர்செய்யப்பட்டான்.

வழக்கு 16-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டு எதிரி 1000 ரூபாய் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறான்.

படகோட்டி மீது வழக்கு

நயினாதீவு, அக். 9

நயினாதீவிலிருந்து அனலைதீவிற்கு 22 பிரயாணிகளை ஏற்றிச் சென்ற வள்ளம் கடலில் மூழ்கி 11 பேர், சென்ற ஜூலை மாதம் இறந்தமை ஏற்கெனவே வெளியானது. அவ்வூரைச் சேர்ந்த படகோட்டி ஆறுமுகப் ஐயாத்துரையென்பவன் கவனயீனமாகப் படகோட்டினானென்றும் மேலதிகமாகப் பிரயாணிகளை ஏற்றி 11 பேருக்கு அபாயம் விளைத்தானென்று குற்றஞ்சாட்டி ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஓர் வழக்கை தீவுப்பகுதி மு. ஆர். ஓ தொடர்ந்தார். நீதிபதி எதிரியாகிய ஐயாத்துரையை 500 ரூ பிணையில் விட்டு விசாரணையை ஒத்திவைத்துள்ளார். (ந-நி)

தென்னாப்பிரிக்கா விடமிருந்து பிரிட்டன் கடன்வாங்குகிறது

தங்கமாக 8 கோடி பவுண்

லண்டன், அக் 9

பிரிட்டன் தென் ஆப்பிரிக்காவிடமிருந்து 8 கோடி பவுண் பெறுமதியான தங்கம் கடன் வாங்குகிறது. இது சம்பந்தமாக இன்று பிரிடடிஷ் பொக்கிஷ மந்திரி டால்டனும் தென்னாப்பிரிக்க ஹை கமிஷனர் நிக்கலஸும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். ஜனவரி மாதம் தென்னாப்பிரிக்க பார்லிமெண்ட் இந்த ஒப்பந்தத்தை ஊர்ஜிதம்செய்ததும் தென்னாப்பிரிக்கா 9275 ஆயிரம் அவுன்ஸ் தங்கத்தை பிரிட்டனுக்கு அனுப்பிவைக்கும். இதற்கு வட்டி நூற்றுக்கு அரை விகிதமே. மூன்று வருடங்கள் கழித்து பிரிட்டன் இக்கடனை தங்கமாகவே திருப்பிக் கொடுக்க வேண்டும். பிரிட்டன் தென்னாப்பிரிக்கா விடமிருந்து வருடதிற்கு 120 லட்சம் பெறுமதியான உணவுப் பொருட்களை வாங்கும். (ராய்ட்டர்)

ஆயிரம் ஏக்கருக்கு மேல் நிலம் கூடாது

சர்க்கார் கைப்பற்றிக் கொள்வர்

நிலங்களைப்பாகிஸ்தான் தேசிய மயமாக்குகிறது

டாக்ஸிலா, அக். 9

மேற்குப் பஞ்சாப் ரெவன்யூ மந்திரிசர்தார் ஷௌகத்ஹயாத்கான் பொதுக் கூட்டத்தில் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- மேற்குப் பஞ்சாப்பிலுள்ள நிலங்களை சர்க்கார் தேசிய மயமாக்க உத்தேசித்திருக்கிறார்கள் அதற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு விட்டது. அதன்படி ஒருவர் ஆயிரம் ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துக்கொள்ளக் கூடாது. அதற்கு மேற்பட்ட நிலங்களை சர்க்கார்கைப்பற்றிக்கொள்வர். ஜக்கீர்களை அதாவது ஜமீன்தாரி முறையும் ஒழிக்கப்படும். ஆடுமாடு ஒட்டகைகளுக்கு விதிக்கப்படும் வரி பாதி யளவுக்குக் குறைக்கப்படும்.

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை.

புதிய மதுரமான முந்திரிகைப் பழங்களும் ஆப்பிள்களும் கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரூேச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோட் மருதானை

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்
இன்றும், நாளையும் மெட்னி 3 மணிக்கும்.
சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!

"தாய் நாடு" தமிழ்ப் படம்

வெற்றிகரமான 4-வது வாரம்!

அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது.

மெட்ருஸ் மெயில் புகழ் பாட்லிங்மணி
புதிய நடிகை சுந்தரி
மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் பால்கனிக்கு அரைச் சார்ஜ் எடுக்கப்படும்.

கதம்பைக் கயிறு

கிந்தொட்டை கதம்பைக் கயிறுகளும் தும்பால் செய்யப்பட்ட சாமான்களும் நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்

ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

தேடா கயிறு, கம்பை, வடம், ஈக்கில்தடி, தும்புத்தடி, கயிற்றுப்பாய், காப்பற், கால்மிதி இவ்விடம் குறைந்த விலையில் வேண்டிய தினுசுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தோடு திறம் லங்கா பிராண்ட் விறகரியும், கை பேக்ஸ்களும் கிடைக்கும்.

மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு

விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kalyoom,
Coir Ropes
Manufacturer at Gintota
No 44, Wolfendahl Street,
Colombo.

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 11-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org